வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959

விலை ரூ. 20/=

ஈழநாடு
Eelanadu

Email : news@eelanadu.lk | மலர் : 01 | 04.07.2021 ஞாயிற்றுக்கிழமை | இதழ் : 213 | பக்கங்கள் : 16




## யாழில் 36 பேர் உட்பட வடக்கில் 48 பேருக்கு நேற்று தொற்று உறுதி

யாழ்ப்பாணம், ஜூலை 04

யாழ்.மாவட்டத்தைச் சேர்ந்த 36 பேர் உட்பட வடக்கு மாகாணத்தைச் சேர்ந்த 48 பேருக்கு கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளதுடன் அவர்களில் இருவர் உயிரிழந்துள்ளனர் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

யாழ்.போதனா வைத்தியசாலையின் ஆய்வுகூடத்தில் நேற்று 772 பேருக்கு மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர் பரிசோதனையில் குறித்த விவரங்கள் வெளியாகியுள்ளன.

அதன் அடிப்படையில்

பருத்தித்துறை சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் 12 பேர்,

பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் ஒருவர்

15

## குடாநாட்டில் மேலும் இருவர் கொரோனாவால் உயிரிழப்பு!

யாழ்ப்பாணம், ஜூலை 04

யாழ்ப்பாணத்தில் மேலும் இருவர் உயிரிழந்துள்ள நிலையில் அவர்கள் இருவருக்கும் கொரோனாத் தொற்று உள்ளமை பி.சி.ஆர் பரிசோதனையில் கண்டறியப்பட்டுள்ளது.

யாழ்.போதனா வைத்தியசாலையில் நேற்று மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர் பரிசோதனையில் குறித்த இருவருக்கும் கொரொனாத் தொற்று உள்ளமை தெரியவந்துள்ளது.

யாழ்.மாநகர எல்லைக்குள் வசித்து வந்த 44 வயதுடைய ரி.தர்சன் மற்றும் 56 வயது

15

# கூட்டமைப்பின் பங்காளிகள் யாழ்ப்பாணத்தில் அவசர பேச்சு

## இன்றும் கூடிப் பேசத் தீர்மானம்

யாழ்ப்பாணம், ஜூலை 04

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பங்காளிக் கட்சிகளின் தலைவர்களுக்கிடையில் நேற்று யாழ்ப்பாணத்தில் அவசர சந்திப்பு நடைபெற்றது. இன்றும் மீண்டும் அவர்கள் கூடிப் பேசவுள்ளனர்.

நேற்றைய சந்திப்பு யாழ். மார்ட்டின் வீதியிலுள்ள இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைமைச் செயலகத்தில் முற்பகல் 11.30 மணி தொடக்கம் பிற்பகல் ஒரு மணிவரை இடம்பெற்றது.

15

## வடக்கு மாகாணத்தின் பிரதம செயலர் யார்?

### பரபரப்பாகும் ஆளுந்தரப்பு அரசியல் போட்டி

யாழ்ப்பாணம், ஜூலை 04

வடக்கு மாகாணசபையின் பிரதம செயலாளர் அ.பத்திநாதன் இன்றுடன் ஓய்வு பெறும் நிலையில் புதிய பிரதம செயலாளரை தெரிவு செய்வது தொடர்பில் ஆளும் கூட்டணியின் வடக்கு பிரமுகர்கள் பரிந்துரைத்தவர்கள் உட்பட்ட ஐவரில் ஒருவரைத் தேர்வு செய்வதற்கான நடவடிக்கைகள்

15

## தமிழகமும் புலம்பெயர் சமூகமும் இணைந்தால் பல்வேறு விடயங்களில் அரசை தடுத்து நிறுத்தலாம்

### செல்வம் அடைக்கலநாதன் கூறுகிறார்



யாழ்ப்பாணம், ஜூலை 04.

“தமிழகமும் புலம்பெயர் சமூகமும் ஒன்றிணைந்தால் அரசைப் பல்வேறு விடயங்களிலும் தடுத்து நிறுத்தலாம்.”

- இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பங்காளிக் கட்சியான ரெலோவின் தலைவரும் வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்தார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பங்காளிக் கட்சிகளின் தலைவர்களுக்கிடையிலான நேற்றைய சந்திப்பைத் தொடர்ந்து ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்

15

## கொரோனா தொற்றால் மேலும் 34 பேர் மரணம்!

### மொத்த உயிரிழப்பு 3,191

கொழும்பு, ஜூலை 04

இலங்கையில் கொரோனா வைரஸ் தொற்றால் மேலும் 34 பேர் உயிரிழந்துள்ளனர் என்று சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் விசேட வைத்திய நிபுணர் அசேல குணவர்தன உறுதிப்படுத்தியுள்ளார்.

இதையடுத்து நாட்டில் கொரோனாத் தொற

15

## 1, 251 பேருக்கு நேற்று கொரோனா தொற்று

கொழும்பு, ஜூலை 04

இலங்கையில் கொரோனா வைரஸ் தொற்றால் பாதிக்கப்பட்ட மேலும் 1, 251 பேர் நேற்று அடையாளம் காணப்பட்டுள்ளனர் என்று சுகாதார அமைச்சின் தொற்று நோயியல் பிரிவு தெரிவித்துள்ளது.

15




## நாட்டில் மேலும் 3 மாவட்டங்களில் டெல்டா தொற்று

கொழும்பு, ஜூலை 04

நாட்டில் மேலும் சில டெல்டா வைரஸ் தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர் என்று பிரதி சுகாதார சேவைகள் பணிப்பாளர், விசேட வைத்தியர் ஹேமந்த ஹேரத் தெரிவித்துள்ளார்.

15

## யாழ். மாவட்டத்தில் 2 ஆம் கட்ட தடுப்பூசி வழங்கல் நாளை முதல்!

யாழ்ப்பாணம், ஜூலை 04

யாழ். மாவட்டத்திற்கு 2ஆவது தொகுதியாக கிடைக்கப்பெற்றுள்ள 50 ஆயிரம் சினோபார்ம் தடுப்பூசிகள் நாளை திங்கள் முதல் 10 ஆம் திகதி வரை வழங்கப்பட உள்ளதாக வட

15

# இப்படியும் நடக்கிறது...!

இரண்டாயிரத்து பதினைந்து தேர்தலில் மகிந்த ராஜபக்ஷ தோல்வியடைந்து அம்பாந்தோட்டைக்கு திரும்பியபோது அவரின் அரசியல் வாழ்க்கை முடிந்து விட்டது என்றே பலரும் நம்பினர்.

அதனால் அவரோடு கூடஇருந்தவர்கள் பலர் உடனடியாகவே மைத்திரி பக்கம் தாவினர்.

அவர்களைப் பொறுத்தவரை, தமது அரசியல் பதவிகள் முக்கியமானவையாக இருந்தன.

எதிர்க்கட்சி தலைவராக, பிரதமராக, ஜனாதிபதியாக எல்லாம் இருந்து - அரசி யலில் 'ஒன்றும் இல்லாத' ஆளாகவும் மஹிந்த காட்சி தந்த அந்தக் காலத்திலும் கூட, அவரை விட்டு நீங்காமல் கூடவே இருந்தவர்களில் இந்த வாலிபரும் ஒருவர்.

2004ஆம் ஆண்டளவில் க.பொ.த. உயர்தரத்தில் படித்துக்கொண்டிருந்த, யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியடியைச் சேர்ந்த வாலிபனான கீதநாத் காசிலிங்கத்திற்கு - அதே தரத்தில் அப்போது படித்துக்கொண்டிருந்த நாமலுடன் ஏற்பட்ட தொடர்பு இருவருக்கும் இடையே மிக நெருக்கமான நட்பை தோற்றுவித்திருந்தது.

அப்போது நாமல், பாராளுமன்ற எதிர்கட்சித் தலைவரின் மகன். அவ்வளவுதான்.

பின்னர் 2010இல் நாமல் முதன் முதலாக பாராளுமன்றம் சென்ற பின்னர், அவரின் வடக்கு மாகாணத்திற்கான இணைப்பாளராக நியமிக்கப்பட்ட கீதநாத். 2015இல் மஹிந்த தோல்வி யடைந்த பின்னரும் மஹிந்த - நாமல் குடும்பத்தோடு கூடவே இருந்த கீதநாத், நாமல் மீண்டும் பாராளுமன்ற உறுப்பின ராகிய போது - அவரின் தனிப்பட்ட பணிக்குழாமில் ஆய்வாளராக இருந்தார்.

மஹிந்த ராஜபக்க்ஷ மீண்டும் 2019இல் பிரதமரான போது அவரின் இணைப்பு செயலாளர்களில் ஒருவராக நியமிக்கப்பட்டார்.

மஹிந்த ராஜபக்க்ஷ தனது எதிர்கால அரசியல் வாரிசாக அடையாளப்படுத்தியிருப்பது நாமலைத்தான் என்பது ஒன்றும் இரகசியமான விடயமல்ல.

ராஜபக்ஷக்கள், எந்தத் தேர்தலில் போட்டியிட்டாலும் தமிழ் வாக்குகளை அவர்கள் பெரிதும் எதிர்பார்த்ததில்லை.

தமிழ் மக்களின் வாக்குகளைத் தனது எதிரணி வேட்பாளருக்கு கிடைக்காமல் பண்ணுவதில் செலுத்தும் அக்கறையை, அந்த வாக்குகளைத் தமக்குப் பெறுவதில் அவர்கள் காட்டுவதில்லை.

ஆனால், நாமல் போட்டியிடுகின்ற போது அப்படி இருக்கக்கூடாது என்பதில் ஆரம்பத்திலிருந்தே மஹிந்தர் கவனம் செலுத்தி வருவதை கவனிக்கலாம்.

அதனாலேயே நாமலும் அடிக்கடி யாழப்பாணம் வந்து மக்களின் மனநிலையை அறிந்துகொள்வதுடன், அவர்களின் தேவையைப் பூர்த்தி செய்வதிலும் அக்கறை காட்டிவருகின்றார்.

நாமலின் அரசியல் பாதையை தனியாக வடக்கில் உருவாக்க மஹிந்தர் தெரிவு செய்திருப்பது, தமது குடும்பத்தில் ஒரு பிள்ளை போன்ற, இந்த கீதநாத் என்ற இளைஞனைத்தான் என்பது அண்மைய காலங்களில் நடக்கும் விடயங்களை அவதானிக்கின்றபோது தெரிகிறது.

முதலில் வடக்கின் விடயங்களைக் கவனிக்க பிரதமரின் சிறப்பு பிரதிநிதியாக நியமிக்கப்பட்டிருந்த கீதநாத், இங்கு நடக்கும் தில்லுமுல்லுக்களை அடையாளம் கண்டு தீர்த்துவைக்க முயன்று வருகின்றார்.

சாவகச்சேரியில் வீட்டுத் திட்டம் தொடர்பாக எழுந்த சர்ச்சையைத் தொடர்ந்து அங்கு உள்ளூர் அரசியல்வாதி ஒருவரால் தயாரிக்கப்பட்ட பயனாளிகள் பட்டியலை மாற்றியமைத்து அதிரடி காட்டினார்.

இது தொடர்பான செய்திகள் வெளிவந்த பின்னர், அண்மையில் யாழ்ப்பாணம் வந்த நாமலிடம், இந்த விடயத்தை, குறித்த அரசியல்வாதி முறையிட்டா ரெனவும் தெரியவந்தது.

அவ்வாறு அவர் முறையிட்டதன் பின்னர், வடக்கு, கிழக்கு மாகாணங்களுக்கான, மீள்குடியேற்றம், வீட்டுத் திட்டம், புனர்வாழ்வு போன்ற விடயங்களுக்குப் பொறுப்பான தனது பிரதிநிதியாக பிரதமர், கீதநாத்தை மேலதிக பொறுப்புக்களுடன் நியமித்திருக்கிறார்.

இந்தச் செய்தி அந்த அரசியல்வாதிக்கு விடுக்கப்பட்ட செய்தியாகவே தெரிகின்றது.

நாமல் அரசியலில் இளையவர் என்றாலும், அரசியல் என்றால் என்ன என்பதை மிக ஆழமாக தெரிந்துகொண்ட அரசியல் ஞானி ஒருவரின் புதல்வர். அவரை குறைத்து மதிப்பிட முடியாது.

இங்குள்ள அங்கஜனோ, டக்ளஸ் தேவானந்தாவோ தமக்கென வாக்கு வங்கிகளை வைத்திருந்தாலும், அது அவர்கள் தேர்தலில் போட்டியிடும் போது மாத்திரமே பிரதிபலிக்கும்.

அதுவும் அவர்கள் தமது வாக்காளர்களுக்குப் பெற்று வழங்கும் சலுகைகள் தொடர்வதைப் பொறுத்தது.

ஆனால், அவர்கள் "இவருக்கு போடுங்கள்" என்று ஒருவரை கை காட்டி னால், அவர்களின் ஆதரவாளர்கள் இவர்கள் கை காட்டும் அந்த ஒருவருக்கு வாக்களிக்கப்போவதில்லை என்பது கடந்த தேர்தலில் நிரூபணமானது.

2015 ஜனாதிபதித் தேர்தலில் மஹிந்தர் தோல்வி அடைந்த அன்று இரவே, தனது கட்சி காரியாலயத்திலிருந்த மஹிந்தரின் படத்தை இரவோடு இரவாக நீக்கிவிட்டு, மைத்திரியின் படத்தைப் போட்டவர்களை நம்பி அரசியல் செய்ய நாமல் தயாராக இல்லை என்பதையே அண்மைக்கால சம்பவங்கள் உணர்த்துகின்றன.

**- ஊர்க்குருவி**

## இலங்கையர் மூவர் இந்தியாவில் கைது!

சர்வதேச போதைப்பொருள் கடத்தல் மற்றும் குற்றச்செயல்களுடன் தொடர்புடைய இலங்கையர்கள் மூவர், கேரளா அங்கமாலி பிரதேசத்தில் வைத்து கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

இவர்கள் போலி அடையாள அட்டைகளுடன் கேரளா, அங்கமாலி - கிடங்கூர் பிரதேசத்திலுள்ள வீடொன்றில் தங்கியிருந்ததாக இந்திய ஊடகங்கள் தெரிவித்தன. கேரளாவில் இடம்பெற்ற பல குற்றச்செயல்களுடன் இவர்கள் தொடர்புடையவர்கள் என விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

### கல்வி TV CHANNEL-1

**04.07.2021**
**ஞாயிற்றுக்கிழமை**

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 05.15 | தரம்-06 | கணிதம் |
| 06.00 | தரம்-07 | தமிழ் |
| 06.45 | தரம்-08 | கணிதம் |
| 07.30 | தரம்-09 | வரலாறு |
| 08.15 | தரம்-10 | தமிழ் |
| 09.00 | மாணவர்களுக்கானது | ஆலோசனை |
| 09.15 | க.பொ.த.உயர்தரம் | அரசியல் |
| 10.15 | க.பொ.த.உயர்தரம் | பொருளியல் |
| 11.15 | க.பொ.த.உயர்தரம் | இரசாயனவியல் |
| 12.15 | General knowledge | General knowledge |
| 12.30 | 06 TO சாதாரணதரம் | English வினாத்தாள் |
| 01.15 | க.பொ.த. சா.தரம் | விஞ்ஞானம் வினாத்தாள் |
| 02.00 | க.பொ.த. சா.தரம் | தமிழ் வினாத்தாள் |
| 02.45 | க.பொ.த. சா.தரம் | கணிதம் வினாத்தாள் |
| 03.30 | க.பொ.த சா.தரம் | வரலாறு வினாத்தாள் |
| 04.15 | க.பொ.த. சா.தரம் | சைவசமயம் வினாத்தாள் |
| 05.00 | A/Lவினாத்தாள் | Live Telecast வணிகப்பிரிவு |
| 06.00 | தரம்-05 | புலமைப்பரிசில் வினாத்தாள் |
| 07.00 | A/Lவினாத்தாள் | மறுஒளிபரப்பு |
| 08.00 | தரம்- 05 | மறு ஒளிபரப்பு புலமைப்பரிசில் வினாத்தாள் |
| 09.00 | க.பொ.த.உயர்தரம் | அரசியல் |
| 10.00 | க.பொ.த.உயர்தரம் | பொருளியல் |
| 11.00 | க.பொ.த.உயர்தரம் | இரசாயனவியல் |
| 12.00 | 06 TO Learning English | English |
| 12.45 | க.பொ.தா சா.தரம் | விஞ்ஞானம் வினாத்தாள் |
| 01.30 | க.பொ.தா சா.தரம் | தமிழ் வினாத்தாள் |
| 02.15 | க.பொ.தா சா.தரம் | கணிதம் வினாத்தாள் |
| 03.00 | க.பொ.தா சா.தரம் | வரலாறு வினாத்தாள் |
| 03.45 | க.பொ.தா சா.தரம் | சைவசமயம் வினாத்தாள் |
| 04.30 | தரம்-10 | English |

### கல்வி TV CHANNEL - 2

**04.07.2021**
**ஞாயிற்றுக்கிழமை**

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 06.00 | பஞ்சபுராணம் | பஞ்சபுராணம் |
| 06.15 | நற்கருணை | நற்கருணை |
| 06.30 | திருக்குறள் பொருள | நாள் ஒரு திருக்குறள் |
| 06.45 | PLAY GROUP | கதை |
| 07.30 | முன்பள்ளி | பாட்டு |
| 08.15 | தரம்-01 | English |
| 09.00 | தரம்-02 | அழகியல் |
| 09.45 | தரம்-03 | English |
| 10.30 | தரம்-03 | கிறிஸ்தவம் |
| 11.15 | தரம்-04 | சைவசமயம் |
| 12.30 | தரம்-04 | சுற்றாடற்கல்வி |
| 01.15 | தரம்-05 | English |
| 02.00 | தரம்-05 | சுற்றாடற்கல்வி |
| 02.45 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 03.30 | PLAY GROUP | கதை |
| 04.15 | முன்பள்ளி | பாட்டு |
| 05.00 | தரம்-01 | English Cartoom |
| 05.15 | தரம்-02 | அழகியல் |
| 06.00 | தரம்-03 | English |
| 06.45 | தரம்-03 | கிறிஸ்தவம் |
| 07.30 | தரம்-04 | சைவசமயம் |
| 08.15 | தரம்-04 | சுற்றாடற்கல்வி |
| 09.00 | தரம்-05 | English |
| 09.45 | தரம்-05 | சுற்றாடற்கல்வி |
| 10.30 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 11.15 | தரம்-03 | English |
| 12.30 | தரம்-03 | கிறிஸ்தவம் |
| 01.15 | தரம்-04 | சைவசமயம் |
| 02.00 | தரம்-04 | சுற்றாடற்கல்வி |
| 02.45 | தரம்-05 | English |
| 03.30 | தரம்-05 | சுற்றாடற்கல்வி |
| 04.15 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 05.00 | English | CARTOON |
| 05.30 | English | பாட்டு |

Eelanadu
04.07.2021 ஞாயிற்றுக்கிழமை
பிலவ வருடம், ஆனி 20

**"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"**
- யோகர் சுவாமிகள்.

E-mail: editor@eelanadu.lk, news@eelanadu.lk
தொலைபேசி : 021 730 1370

# 43ஆவது படையணியின் அழைப்பு!

அரசாங்கம் நெருக்கடியில் இருப்பதான ஒரு தோற்றம் தெரிகின்றது. கொரோனாவிற்கு பின்னரான நிலைமைகளே இதற்கான பிரதான காரணமாகும். இது இலங்கைக்கு மட்டும் உரிய ஒன்றல்ல. வளர்சியடைந்த நாடுகளே பெரும் நெருக்கடிகளுக்கு முகம் கொடுத்து வருகின்றது. அவற்றோடு ஒப்பிட்டால் இலங்கையின் நிலைமைகள் ஆச்சரியமான ஒன்றல்ல.

பொதுவாகவே ஆட்சியில் இருப்பவர்கள் முன்னைய ஆட்சியாளர்களை குற்றம் சாட்டுவதும், அதேபோன்று எதிரணியினர் அரசாங்கத்தை குற்றம் சாட்டுவதும் சாதாரணமான ஒன்று. இன்று இலங்கை எதிர்கொண்டிருக்கும் நெருக்கடிக்கு அரசாங்கத்திலுள்ளவர்களோ, ரணில் - மைத்திரி ஆட்சியின் மீதே விரலை நீட்டுகின்றனர். இதிலுள்ள வேடிக்கையான விடயம் என்னவென்றால், தற்போதைய அரசாங்கத்தின் பங்காளிக் கட்சிகளில் மைதிதிரி தலைமையிலான சிறீலங்கா சுதந்திர கட்சியும் ஒன்று.

பொருளாதார நெருக்கடிகளுக்கு அப்பால், அரசாங்கத்தின் பங்காளிக் கட்சிகளுக்கும் பிரதான கட்சியான பொதுஜன பெரமுனவிற்கும் இடையில் நிலவிவரும் முரண்பாடுகளாலும் அரசாங்கம் உள்ளுக்குள் நெருக்கடிகளை எதிர்கொண்டிருக்கின்றது. இதன் மூலம் கோட்டாபய தலைமையிலான அரசாங்கம் நெருக்கடியிலிருக்கின்றது. இவ்வாறானதொரு பின்புலத்தில்தான், பஸில் ராஜபக்ஷ முக்கிய பொறுப்புக்களை ஏற்கப் போவதான செய்திகள் வெளியாகிவருகின்றன.

இதனை சரிசெய்யக் கூடிய வல்லமையுள்ளவர் பஸில் ஒருவர்தான், என்றவாறான ஓர் அப்பிராயமும் அண்மைக்காலமாக அவ்வப்போது மெதுவாக எட்டிப்பார்க்கின்றது. பிறிதொரு வகையில் கோட்டாபயவினால் விடயங்களை கையாள முடியாமல் இருக்கின்றது - என்னும் பார்வையும் சிங்கள மக்களுக்கு கொடுக்கப்படுகின்றது. கட்சிக்குள்ளும் அரசாங்கத்திற்குள்ளும் இதன் தாக்கம் எவ்வாறு அமையும் என்பதைப் பொறுத்திருந்துதான் நோக்க வேண்டும்.

இந்த நிலையில் சம்பிக்க ரணவக்கவின் தலைமையிலான 43 படையணி எதிரணிகளுக்கு தலைமை தாங்கத் தயார் - என்று அறிவித்திருக்கின்றது. தற்போதைய அரசாங்கத்திற்கு எதிரான, பலமானதொரு பொது அரசியல் தளத்திற்கு தலைமை தாங்க, தாம் தயாராக இருக்கிறார் என்று சம்பிக்க ரணவக்க தெரிவித்திருக்கின்றார்.

சம்பிக்க, பிரதான எதிரணியான ஐக்கிய மக்கள் சக்தியுடன் இணைந்திருந்தாலும்கூட, பிறிதொருபுறம் 43ஆவது படையணி என்னும் அரசியல் இயக்கம் ஒன்றிற்கும் தலைமை தாங்கி வருகின்றார். இலங்கையின் இலவசக் கல்வியின் தந்தை என அழைக்கப்படும் கண்ணங்கரா, 1943 இலங்கையில் இலவசக் கல்வி முறைமையை அறிமுகம் செய்திருந்தார். இதனை அடிப்படையாகக் கொண்டே மேற்படி 43ஆவது படையணி என்னும் அரசியல் இயக்கத்தை சம்பிக்க ஆரம்பித்திருக்கின்றார்.

உண்மையில் பொதுஜன பெரமுனவின் பலத்துடன் ஒப்பிட்டால் அதற்கு சவால் விடுக்கக் கூடியளவிற்கு பலமானதோர் எதிரணி நாட்டில் இல்லை. இவ்வாறானதொரு பின்புலத்திலேயே சம்பிக்க ரணவக்க இந்த அழைப்பை விடுத்திருக்கின்றார். ரணில் மீண்டும் பாராளுமன்றத்திற்குள் வந்திருக்கும் நிலையில், அண்மைக் காலமாகப் பிரதான எதிரணி ஒன்றை ஏற்படுத்துவது தொடர்பில் பரவலான பேச்சுக்கள் அடிபடுகின்றன. இவ்வாறானதொரு பின்புலத்தில்தான் சம்பிக்க இவ்வாறானதோர் அறிவிப்பை வெளியிட்டிருக்கின்றார்.

## ஆப்கானிஸ்தானில் புது அத்தியாயம்

# இருபது வருட கால படைத்தளத்தை விட்டு விலகிச் சென்றது அமெரிக்கா

**பாரிஸிலிருந்து குமாரதாஸன்**

"கிழக்கின் குவாண்டனாமோ" (Guantanamo of the East) என்று அழைக்கப்பட்டு வந்த பக்ரம் படைத்தளத்தில் (base of Bagram) இருந்து கடைசி அமெரிக்க வீரர்கள் விமானத்தில் ஏறி நாடு திரும்புகின்ற காட்சிகள் வெளியாகி உள்ளன.

தலிபான், அல்கெய்டா தீவிரவாத இயக்கங்களுக்கு எதிரான போரில் இரு தசாப்த காலமாக அமெரிக்கா தனது பலமான கோட்டையாகப் பேணிவந்த பக்ரம் தளத்தை ஆப்கான் படைகளிடம் கையளித்துவிட்டு அங்கிருந்து அடியோடு அகன்று செல்கிறது. ஆப்கானிஸ்தான் நாட்டின் வரலாற்றில் பக்ரம் தளம் கைவிடப்பட்ட இன்றைய வெள்ளிக்கிழமை ஒரு முக்கிய நாள். இருபது ஆண்டுகளுக்குப் பிறகு அங்கு ஒரு புதிய அத்தியாயம் திறக்கப்படுகின்ற நாள் என்றும் கூட இதனைக் குறிப்பிட்டாலும் நீண்ட போர்களையும் அழிவுகளையும் மட்டுமே கண்டு வந்த அந்த மண்ணில் நல்லதொரு மாற்றத்தின் தொடக்கமாக இதனைக் கொண்டாடிவிட முடியாது.

தலிபான்கள் என்கின்ற மிகத் தீவிரமான இஸ்லாமிய அடிப்படைவாதக் கொள்கைகளைக் கொண்ட ஆயுத இயக்கத்தின் ஆக்கிரமிப்பில் இருந்த ஆப்கானிஸ்தானை மீட்பதற்காக 2001 இல் அமெரிக்கா தலைமையிலான நேட்டோ படைகள் காலூன்றிய தளம் தான் பக்ரம். செப்ரெம்பர் 11 தாக்குதலுக்குப்பின்னர் அமெரிக்கா தீவிரமாக முன்னெடுத்து வந்த பயங்கரவாதத்துக்கு எதிரான உலகளாவிய போரின் முக்கிய மையங்களில் ஒன்றாகவும் அது விளங்கிவந்தது.

சோவியத் ஆக்கிரமிப்பின் போது அதன் படைகளால் முதன் முதலில் நிறுவப்பட்ட பக்ரம் தளம் ஆப்கானிஸ்தான் நாடு மீதான ஆக்கிரமிப்புகளின் ஓர் அமைதிவடிவம். அமெரிக்கா அங்கு காலூன்றிய பிறகு பக்ரம் தளத்தை ஓர் இராணுவத் தளம் என்று கூறுவதை விட ஒரு குட்டி "அமெரிக்க நகரம்" என்ற சொல்லும் அளவுக்கு அது பிரமாண்டமாக விரிவு படுத்தப்பட்டது.

சுமார் 2 ஆயிரம் ஹெக்ரயர் பரப்பில் முப்பதாயிரம் அமெரிக்கப் படை வீரர்களுக்காக 24 மணிநேர நவீன சந்தைகள், சினிமா, அருந்தகங்கள், துரித உணவு நிலையங்கள் என்று பல உல்லாச வசதிகளோடு - ஒரு நகரம் போன்ற கட்டமைப்புகளுடன் - படைத்தளம் காட்சிளித்தது. விசாரணை ஏதும் இன்றிப் பல நூற்றுக் கணக்கானோர் தடுத்துவைக்கப் படுகின்ற சிறை ஒன்றும் அங்கு இருந்தது. அந்தத் தடுப்பு முகாம் சிறை காரணமாகவே பக்ரம் தளம் கிழக்கின் குவாண்டனாமோ (Guantanamo) என்ற பெயர் பெற்றது.

கடந்த இரண்டு ஆண்டுகளாக தலிபான்களுடன் அமெரிக்கா நடத்திவந்த பேச்சுக்களை அடுத்தே படைவெளியேற்றத்துக்கான தீர்மானம் எடுக்கப்பட்டது. முன்னாள் அதிபர் ட்ரம்ப்பின் நிர்வாகமே தலிபான்களுடனான இணக்கத்தைத் தொடக்கி வைத்தது.

சுமார் இரண்டாயிரம் பில்லியன் டொலர் நிதியையும், சுமார் இரண்டாயிரத்து 500 போர் வீரர்களது உயிர்களையும் விலையாகச் செலுத்திவிட்டு ஆப்கானிஸ்தானில் இருந்து விலகுகின்றது அமெரிக்கா. அது அங்கு தனது இராணுவத் தலையீடைத் தொடக்கி போது மதிப்பிட்ட நிதியை விட மூன்று மடங்கு அதிகமான தொகையை போரில் இழந்துள்ளது. நேட்டோ நாடுகளும் படிப்படியாக அங்கிருந்து தமது படைகளைத் திருப்பி அழைக்கவுள்ளன.

வெளிநாட்டு இராணுவத் தலையீடுகள் எந்த மண்ணிலும் வெற்றியளித்ததாக சரித்திரம் இல்லை. வியட்நாம் முதல் ஆப்கான் வரை அமெரிக்க ஆக்கிரமிப்புகளின் கதையும் அதுதான். ஆப்கானிஸ்தானில் அமெரிக்கப் படை நடவடிக்கைகள் முற்றாக முடிவுக்கு வருவதை அதிபர் ஜோ பைடன் எதிர்வரும் செப்ரெம்பர் 11 ஆம் திகதி- உலக வர்த்தக மையத் தாக்குதல் தினத்தன்று- உத்தியோக பூர்வமாக அறிவிப்பார் என்று எதிர்பார்க்கப் படுகிறது.

தலைநகர் காபூலில் இருந்து சுமார் 50 கிலோ மீற்றர்கள் வரை தங்களது கட்டுப்பாட்டை விஸ்தரித்துள்ள தலிபான்கள் ஆப்கானிஸ்தானின் 400 மாவட்டங்களை தங்கள் பிடியில் வைத்துள்ளனர். வெளிநாட்டுப் படைகளது வெளியேற்றத்தை வரவேற்றுள்ள அவர்கள், அதற்கு முழு ஒத்துழைப்பு வழங்குவதாக அறிவித்திருக்கின்றனர். நாடு முழுவதுமாக மீண்டும் தலிபான்களிடம் வீழும் நிலையில் தாங்கள் மேற்குலகினால் கைவிடப்படுவதான உணர்வு ஆப்கன் மக்கள் தரப்பில் காணப்படுகிறது. எந்த இராணுவத் தலையீடுகளும் அமைதியை விட்டுச் செல்லத் தவறிய அந்த நாட்டு மக்களின் தலைவிதி அமெரிக்கப் படைகளின் வெளியேற்றத்துடன் மீண்டும் தலிபான்களின் கைகளில் முழுவதுமாக விடப் படுகிறது. அங்கு பதவியில் உள்ள மிகப் பலவீனமான அரசு தலிபான்களிடம் மண்டியிடப் போகின்ற நாள் வெகுதொலைவில் இல்லை.

அவ்வாறு நாட்டின் அதிகாரம் தலிபான்கள் வசமானால் அங்கு என்ன நடக்கும் என்ற சில கேள்விகளுக்கு விடை தெரியாது. அங்குள்ள மேற்கு நாடுகளின் ராஜதந்திரிகள், துதரகப் பணியாளர்கள், அவர்களது குடும்பத்தினர்கள் போன்றோரது பாதுகாப்புக்கு தலிபான்களின் உத்தரவாதம் உள்ளதா? 2001 இல் தலிபான்கள் விரட்டப்பட்ட பிறகு அங்கு பெண்களுக்குக் கிடைத்த சுதந்திரங்கள் நிலைக்குமா?

பெண்களின் கல்வி முதல் அவர்களது அடிப்படைச் சுதந்திரங்கள் அனைத்தையும் மறுக்கும் தலிபான்களின் ஆட்சியில் மீண்டும் ஆப்கான் பெண்களின் நிலைமை என்னவாகும்? இப்படிப் பல கேள்விகள் உள்ளன. ●

## அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'



ஜுலை - 04 ஞாயிற்றுக்கிழமை
பிலவ வருடம் - ஆனி 20

| | | |
|---|---|---|
| நல்ல நேரம் | : | 7.30 - 9.00 |
| ராகு காலம் | : | 4.30 - 6.00 |
| திதி | : | தசமி |

## இன்றைய ராசிபலன்

04.07.2021

**மேடம்**
நிம்மதி இருக்கும். சுபநிகழ்ச்சிகளுக்கு முயற்சி செய்வீர்கள். திட்டமிட்ட செயல் முடியும். கருணையை வெளிப்படுத்துவீர்கள். வீண் வம்புகளிலிருந்து விடுபட்டு நிம்மதி அடைவீர்கள்.

**இடபம்**
பணியாளர்களுக்கு பலநாளாக காத்திருந்த நற்செய்தி உண்டு. நண்பர்களுக்கு கைமாற்றாகக் கொடுத்திருந்த பணம் வந்துசேரும். உறவினரால் ஒதுக்கப்பட்டவர்கள் விரும்பி ஏற்கப்படுவீர்கள்.

**மிதுனம்**
உங்களின் கனவுகளுக்கு பிள்ளைகள் வடிவம் கொடுப்பார்கள். வழக்குகளின் தீர்ப்பு தாமதப்படும். அமைதியான நாள். மன அமைதி மீளும். வியாபாரத்தில் முன்னேற்றம் உண்டு.

**கடகம்**
பணியில் எந்தப் பிரச்னை வந்தாலும் சமாளித்து விடுவீர்கள். நீங்கள் மதிக்கும் பெரியவர்களின் ஆசியைப் பெறுவீர்கள். வருமானம் சற்றே உயரும். தொலைநோக்கு சிந்தனை வெற்றி தரும்.

**சிம்மம்**
எதிர்காலம் பற்றி எடுக்கும் தீர்மானங்கள் முன்னேற்றம் தரும். எதிரிகளை நண்பர்களாக்கி கொள்வீர்கள். பரபரப்பு கூடும். மற்றவர்களுடன் விட்டுக் கொடுத்து செல்வது நல்லது.

**கன்னி**
பிறரை நம்பி வாக்குறுதி, முன் ஜாமீன் கொடுக்க வேண்டாம். பல காலம் எண்ணிய பதவி உயர்வு கிடைக்க வாய்ப்புள்ளது. தைரியமான முடிவு எடுக்கும் முன் யோசியுங்கள்.

**துலாம்**
புதிய தீர்மானம் எடுப்பீர்கள். பொறுப்புடன் செயல்படுவீர்கள். பணியில் கடமை அதிகரிப்பதால் அதற்கேற்ற பலனும் கிடைக்கும். பயணம் ஒன்றை மேற்கொள்வதால் நன்மை உண்டாகும்.

**விருட்சிகம்**
சங்கடம் ஒன்றைச் சந்தித்து அதிலிருந்து நன்கு மீளுவீர்கள். கையெழுத்திடும்போது கவனம் தேவை. கோபத்தைக் குறைக்கவும். முன்பைவிட அதிக லாபம் கிடைக்கும். மனச்சோர்வு நீங்கும்.

**தனுசு**
வாழ்க்கைத்துணைக்கு மிகச்சிறந்த நாளாக இன்று அமையும். வேலைக்காக காத்திருப்பவர்களுக்கு நல்ல செய்தி உண்டு. பணி சம்பந்தமான தொல்லை ஒன்றிலிருந்து விடுபடுவீர்கள்.

**மகரம்**
அலைச்சல் தந்த செயல்கள் நல்லபடியாக முடிவடையும். நண்பர் ஒருவரிடம் தந்த வாக்குறுதியை நிறைவேற்றுவீர்கள குடும்பத்திலுள்ள மூத்தவர்களுடன் நல்லுறவு இருக்கும்.

**கும்பம்**
நல்லவர் உதவியால் பிரச்னையிலிருந்து விடுபடுவீர்கள். உயரதிகாரிகளிடம் பேசும்போது நிதானத்தைக் கையாள்வது நல்லது. அனைத்து விஷயங்களிலும் நிதானப்போக்கு இருக்கும்.

**மீனம்**
கிடைக்கும் வாய்ப்பை பயன்படுத்திக் கொள்வது நல்லது. காணாமல் போயிருந்த பொருட்கள் திரும்பவும் கிடைக்கும். பணியில் பிடிப்பு ஏற்பட்டு தேங்கிய வேலைகளை முடிப்பீர்கள்.

# தடுப்பூசிக்கு பயந்து மரத்தில் ஏறியிருந்த பழங்குடி மக்கள்!

சென்னை, ஜுலை 04

பழங்குடி கிராமங்களில் தடுப்பூசி செலுத்த சென்ற சுகாதாரதுறை அதிகாரிகளை கண்டு தப்பி ஓடி கிராம மக்கள் மரத்தில் ஏறிக்கொண்டு சுகாதாரத்துறையினரிடம் வாக்குவாதத்தில் ஈடுபட்ட சம்பவம் கோவையில் நடைபெற்றுள்ளது.

கோவையில் கொரோனா பாதிப்பு தொடர்ந்து குறைந்து வருகிறது. மறுபுரம் பொதுமக்கள் கொரோனா தடுப்பூசி செலுத்திக் கொள்ளவும் ஆர்வம் செலுத்தி வருகின்றனர். இதற்காக மாநகர் மற்றும் ஊரக பகுதியில் சிறப்பு முகாம்கள் அமைக்கப்பட்டு, கையிருப்பு உள்ள தடுப்பூசிகளை சுகாதாரத்துறையினர் செலுத்தி வருகின்றனர்.

இந்நிலையில் மலைகிராம பழங்குடி மக்கள் யாரும் தடுப்பூசி செலுத்திக்கொள்ள முன்வராததால் மலைகிராமங்களுக்கே சுகாதாரத் துறை அதிகாரிகள் நேரடியாக சென்று தடுப்பூசி செலுத்த திட்டமிட்டனர். இதற்கான தொண்டாமுத்தூரை அடுத்த முள்ளாங்காடு, கல்கொத்திபதி, சர்க்கார்பூரத்திபதி, வெள்ளைபதி, சீங்கப்பதி உள்ளிட்ட மலைகிராமத்திற்கு 500 தடுப்பூசிகளுடன் சுகாதாரத்துறை மருத்துவர்கள் மற்றும் ஊழியர்கள் சென்றனர். இவர்களை கண்ட கிராம மக்கள் அங்கிருந்து தப்பிச் சென்றனர். சிலர் தோட்டப் பகுதிகளுக்கு



சென்று ஒளிந்து கொண்டனர். அங்கிருந்த இளைஞர்கள் மரத்தில் ஏறிக் கொண்டனர். மேலும், அப்பகுதியை சேர்ந்த முதியவர்கள் சுகாதாரத் துறையினரிடம் வாக்குவாதத்தில் ஈடுபட்டனர்.

சுமார் 600 வாக்காளர் உள்ள அந்த கிராமத்தில்வெரும்57 பேரும், 90 பேர்இருந்த கிராமத்தில்வெறும் 7 நபர்கள் மட்டுமே தடுப்பூசி செலுத்தி கொண்டனர். இதையடுத்து மருத்துவர்கள், செவிலியர்கள் அந்த மக்களின் வீடுகளுக்கே சென்றதோடு, தடுப்பூசி செலுத்தி கொள்ள அழைப்பு விடுத்தனர்.

ஆனால், தடுப்பூசி செலுத்திக் கொண்டவர்களுக்கு பாதிப்பு ஏற்டவில்லை என்றால் நாங்களும் தடுப்பூசி செலுத்தி கொல்கிறோம் என்று பழங்குடியின கிராம மக்கள் கூறி சென்று விட்டனர். இதனால் எடுத்துச் சென்ற தடுப்பூசிகள் மீண்டும் அனுப்பி வைக்கப்பட்டன.

நகரப் பகுதிகளில் தடுப்பூசி செலுத்த மக்கள்போட்டி போட்டுக் கொண்டிருக்கும் சூழலில், பழங்குடியின மக்கள் தடுப்பூசிக்கு பயந்து மரத்தில் ஏறிக்கொண்ட சம்பவம், தடுப்பூசி தொடர்பான விழிப்புணர்வு இன்னும் மக்கள் மத்தியில் முழுமையாக சென்றடையவில்லை என்பதை உறுதிப்படுத்தும் விதமாக உள்ளது.

## காவிரி விவகாரத்தில் தமிழகத்திற்கு ஆதரவு

காவிரி விவகாரத்தில் தமிழகத்திற்கு ஆதரவாக குரல் கொடுப்போம் என தமிழக பா.ஜ., தலைவர் எல்.முருகன் கூறியுள்ளார்.

டில்லி சென்ற பா.ஜ., எம்.எல்.ஏ.,க்கள் பிரதமர் மோடியை சந்தித்து பேசினார். அப்போது, தமிழக பா.ஜ., தலைவர் எல்.முருகனும் உடன் இருந்தார். பின்னர் நிருபர்களை சந்தித்த முருகன் கூறியதாவது: நீர் சேமிப்பு குறித்தும், நதிகள் இணைப்பு குறித்தும் பிரதமரிடம் வலியு றுத்தினோம். மாமல்லபுரம், தஞ்சாவூர் உள்ளிட்ட சுற்றுலா இடங்களை மேம்படுத்த பிரதமரிடம் கூறினோம். காவிரி விவகாரத்தில் தமிழகம், தமிழர் நலனுக்கு பா.ஜ., என்றும் குரல் கொடுக்கும்.

உச்சநீதிமன்ற உத்தரவுப்படி, நீட் தேர்வு நடத்தப்படுகிறது. தேர்வை, நிறுத்த முடியாது என தெரிந்தும் தி.மு.க. தேர்தல் அறிக்கையில் இடம்பெற்றுள்ளது. நீட் தேர்வு பாதிப்பு குறித்து ஆராய, குழு ஒன்றை தமிழக அரசு அமைத்தது - என்று அவர் கூறினார்.

## தமிழகத்தில் குறைந்தது தினசரி கொவிட் பாதிப்பு

சென்னை, ஜுலை 04

தமிழகத்தில் கடந்த 24 மணி நேரத்தில், தமிழகத்தை சேர்ந்த வர்கள் 4,011 பேரும்மற்ற மாநிலத் தவர்கள் 2 பேர் உள்பட 4,013 கொவிட்டினால் பாதிக்கப்பட்டு உள்ளனர். 115 பேர் உயிரிழந்து உள்ளனர். 4,724 பேர் குணமடைந்து உள்ளனர். தமிழகத்தில் கடந்த 43 நாட்களாக கொவிட் பாதிப்பு குறைந்து வருகிறது. சென்னை யில் 52 நாட்களாக கொவிட் பாதிப்பு குறைந்து வருகிறது.

இது தொடர்பாக சுகாதாரத் துறை வெளியிட்ட அறிக்கையில் கூறப்பட்டு உள்ளதாவது:

தமிழகத்தில் நேற்று முன் தினம் மட்டும் 1, 60,194 மாதி ரிகள் கொவிட் பரிசோதனை செய் யப்பட்டன. அதில், 4,013 பேருக்கு கோவிட் உறுதியானது. இதன் மூலம் கொவிட்டினால் பாதிக்கப் பட்டவர்களின் எண்ணிக்கை 24,92,420 ஆக அதிகரித்து உள் ளது. மேலும் தற்போது வரை 3,33,22,908 மாதிரிகள் கொவிட் பரிசோதனை செய்யப்பட்டு உள் ளன. நேற்று கொவிட் உறுதியா னவர்களில் 2,319 பேர் ஆண்கள், 1,694 பேர் பெண்கள். இதன் மூலம், கொவிட்டினால் பாதிக்கப்பட்ட ஆண்களின் எண்ணிக்கை 14,56,793 ஆகவும், பெண்களின் எண்ணிக்கை 10,35,589 ஆகவும் அதிகரித்து உள்ளது. 4,724 பேர் கொவிட்டில் இருந்து மீண்டு வீடு திரும்பியதை தொடர்ந்து, வைரஸ் பாதிப்பில் இருந்து குணமடைந்தவர்களின் எண்ணிக்கை 24,23,606 ஆக உயர்ந்துள்ளது.

115 பேர் கோவிட் பாதிப்பு காரணமாக உயிரிழந்துள்ளனர். அதில், 22 பேர் தனியார் மருத்துவமனையிலும், 93 பேர் அரசு மருத்துவமனையிலும் உயிரிழந்துள்ளனர். இதனால், வைரஸ் காரணமாக உயிரிழந்தோரின் எண்ணிக்கை 32,933 ஆக அதிகரித்து உள்ளது.

# எம்.ஜி.ஆர். ரசிகர்கள் சசிகலாவுக்கு கண்டனம்

சென்னை, ஜுலை 04

எம்.ஜி.ஆரின் பெயரை இழுத்து சசிகலா தவறான விடயத்தை தொட்டிருக்கிறார் என எம்.ஜி.ஆரின் ரசிகரும், அ.தி.மு.க. முன்னாள் எம்.பி.யுமான கே.சி. பழனிசாமி கூறியுள்ளார்.

கடந்த சட்டமன்ற தேர்தலின் போது அரசியலை விட்டு ஒதுங்கி இருந்த சசிகலா தேர்தலில் அ.தி.மு.க. தோல்வி அடைந்த பிறகு மீண்டும் தனது அரசியல் நடவடிக்கைகளை தொடங்கி உள்ளார். தினமும் அவர் தனது ஆதரவாளர்களுக்கு போன் செய்து அவர்களிடம் பேசியதை ஆடியோவாக வெளியிட்டு வருகிறார்.

இந்த நிலையில் தூத்துக்குடியை சேர்ந்த ராமசாமி என்பவரிடம் சசிகலா பேசிய ஆடியோவில், ‘மறைந்த முதல்-அமைச்சர் எம்.ஜி.ஆருக்கு நான் ஆலோசனைகள் கூறி இருக்கிறேன். கட்சி தொடர்பாக என்னிடம் எம்.ஜி.ஆர். கருத்து கேட்பார். நான் சொல்லும் கருத்துக்களை எம்.ஜி.ஆர். பொறுமையாக கேட்பார். எம்.ஜி.ஆர் பேசும் போது எப்படியெல்லாம் பேசினால் நன்றாக இருக்கும் என்று நான் அறிவுரை வழங்கி இருக்கிறேன். இது பலருக்கும் தெரியாது’ என்று பேசி இருக்கிறார்.

சசிகலாவின் இந்த பேச்சு அ.தி.மு.க.வினர் இடையே அதிர்ச்சியை ஏற்படுத்தி உள்ளது. குறிப்பாக எம்.ஜி. ஆர். ரசிகர்கள் மத்தியில் கொந்தளிப்பை ஏற்படுத்தி உள்ளது. எம்.ஜி.ஆர். பற்றி கருத்து தெரிவித்த சசிகலாவுக்கு எம்.ஜி.ஆர். ரசிகர்கள் இணைய தளங்களில் கண்டனம் தெரிவித்து வருகிறார்கள். இது தொடர்பான மீம்ஸ்களையும் எம்.ஜி.ஆர். ரசிகர்கள் இணைய தளங்களில் பகிர்ந்து வருகிறார்கள்.

# திருமலை உள்ளிட்ட 4 மாவட்டங்களில் டெல்டா வைரஸ் திரிபு தொற்றாளர்கள்!

**கொழும்பு, ஜூலை 04**

**நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் கோவிட்-19 பாதிக்கப்பட்டவர்களிடமிருந்து எடுக்கப்பட்ட மாதிரிகள் குறித்த பரிசோதனை அறிக்கை சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.**

கொழும்பு, திருகோணமலை, காலி மற்றும் மாத்தறை மாவட்டங்களைச் சேர்ந்த 13 பேருக்கு டெல்டா வைரஸ் திரிபு உள்ளமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

ஸ்ரீஜெயவர்த்தனபுர பல்கலைக்கழகத்தில் ஒவ்வாமை மற்றும் நோயெதிர்ப்பு மற்றும் நுண் உயிரியல் துறை இந்த பரிசோதனைகளை மேற்கொண்டது.

கடந்த வாரம் எடுக்கப்பட்ட 141 மாதிரிகள் பற்றிய அறிக்கைகள் சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டதாக அதன் பணிப்பாளர், மருத்துவர் சந்திம ஜீவந்தர தெரிவித்தார்.

இந்திய கொவிட்-19 வைரஸின் டெல்டா திரிபு, கொவிட்-19 தடுப்பூசியை ஒரு டோஸ் மட்டுமே பெற்ற அல்லது எடுத்துக் கொள்ளாதவர்களுக்கு கடுமையான அச்சுறுத்தலை ஏற்படுத்துகிறது என்று மருத்துவர் சந்திம ஜீவந்தர குறிப்பிட்டார்.

கொவிட்-19 தடுப்பூசியின் இரண்டு டோஸ்களையும் பெற்றுக்கொண்டால் குறிப்பிடத்தக்க சதவீதத்தின் முக்கியத்துவத்தை அவர் சுட்டிக்காட்டுகிறார் மற்றும் அச்சுறுத்தல் முடிவடையவில்லை என்று எச்சரிக்கிறார்.

உலகின் மிகவும் ஆபத்தான வைரஸாக மாறியுள்ள இந்திய டெல்டா திரிபு, வேகமாக பரவும் கடுமையான கொரோனா வைரஸ் திரிபு என அடையாளம் காணப்பட்டுள்ளது என்றும் மருத்துவர் சந்திமா ஜீவந்தர சுட்டிக்காட்டினார்.

(அ)

# நயினை அம்பாளை தரிசிக்க நேரில் வருவதை தவிருங்கள்

யாழ்ப்பாணம், ஜூலை 4

நயினாதீவு நாகபூசணி அம்மன் ஆலயத்திற்கு வருவதனை தவிர்த்துக்கொள்ளுமாறு ஆலய அறங்காவலர் சபையினர், அடியவர்களிடம் கோரியுள்ளனர்.

அது தொடர்பில் அவர்கள் விடுத்துள்ள அறிவித்தலில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

சுகாதாரத் துறையினரின் அறிவுறுத்தலுக்கு அமைவாக மட்டுப்படுத்தப்பட்ட அடியவர்களுடன் மட்டுமே நித்திய வழிபாடுகள் இடம்பெறுகின்றன. அடியவர்களின் நேர்த்திகள், அபிசேகங்கள் என்பன தற்காலிகமாக இடைநிறுத்தி வைக்கப்பட்டுள்ளன. அவை மீள ஆரம்பிக்கும் போது அடியவர்களுக்கு அது தொடர்பில் அறிவிக்கப்படும்.

அதனால் தற்போதைய நிலமைகளை கருத்தில் கொண்டு ஆலயத்திற்கு வருகை தருவதனை தவிர்த்து உங்கள் வீடுகளில் இருந்தவாறு அம்பாளை வேண்டிக்கொள்ளுங்கள்- என்றுள்ளது.

(அ)

# பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் திங்கள் முதல் பணிப்புறக்கணிப்பு

கொழும்பு, ஜூலை 04

தமது கோரிக்கைகள் நிறைவேற்றப்படாவிட்டால் அடுத்த திங்கட்கிழமை முதல் தொடர்ச்சியான பணிப் புறக்கணிப்புப் போராட்டத்தில் ஈடுபடுவோம் என்று இலங்கை பொது சுகாதார பரிசோதகர்கள் சங்கம் எச்சரித்துள்ளது.

தாதியர் சேவையின் கோரிக்கைகளுக்கு மட்டுமே தீர்வு வழங்கப்படும் என்று அரசு வெளியிட்டுள்ள அறிக்கை துணை மருத்துவ மற்றும் அதனுடன் தொடர்புடைய சேவைகளில் உள்ள தொழில்களுக்கு பெரும் அநீதியாகும் என்று பொது சுகாதார பரிசோதகர்கள் சங்கத்தின் தலைவர் உபுல் ரோகண தெரிவித்தார்.

இதேவேளை, துணை மருத்துவ சேவைகள் ஒருங்கிணைந்த சபை நேற்று காலை 8.00 மணி முதல் அனைத்து துணை மருத்துவ சேவைகளிலிருந்தும் விலகியுள்ளது.

இணையான சேவைகளில் எந்த அக்கறையும் இல்லாமல் தாதிய சேவையின் கோரிக்கைகள் மீது எடுக்கப்பட்ட முடிவுகள் பல புதிய நெருக்கடிகளை உருவாக்கியுள்ளன என்று அவர்கள் குற்றம் சாட்டுகின்றனர்.

தொடர்புடைய திருத்தங்கள் செய்யப்படும் வரை அடுத்த திங்கட்கிழமை முதல் தொடர்ச்சியான பணிப்புறக்கணிப்புப் போராட்டத்தில் ஈடுபடுவோம் என்று துணை மருத்துவ சேவைகள் கூட்டமைப்பு கூறுகிறது.

# டெல்டா திரிபு வைரஸ் ஒரு தடுப்பூசி பெற்றவர்களையும் தாக்கக்கூடும்!

கொழும்பு, ஜூலை 04

மிக வேகமாக பரவும் டெல்டா வைரஸ் திரிபு இலங்கையில் அடையாளம் காணப்பட்டுள்ள நிலையில், தடுப்பூசி பெற்றவர்கள் மற்றும் பகுதியளவில் தடுப்பூசி பெற்றவர்களுக்கு பாதிப்பாக அமையக் கூடுமென்று ஸ்ரீஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் ஒவ்வாமை, நீர்ப்பீடனம் மற்றும் கல உயிரியல் பிரிவின் பணிப்பாளர் வைத்தியர் சந்திம ஜீவந்தர தெரிவித்துள்ளார்.



இது தொடர்பில் தனது டுவிட்டர் கணக்கில் பதிவிட்ட அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

மேலும் தெரிவித்துள்ள அவர்,

குறிப்பிடத்தக்க சதவீதமானோருக்கு முழுமையாக தடுப்பூசி போடும்வரை இது தொடர்பான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை கடைப்பிடிப்பது முக்கியமாகுமென தெரிவித்துள்ளார்.

அத்துடன், கொரோனா பரவல் தொடர்பான ஆபத்து இன்னும் தணியவில்லை என்பதையும் அவர் தனது டுவிட்டர் பதிவில் சுட்டிக்காட்டியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

(அ)

# பொலிஸ் பேச்சாளர் உள்ளிட்ட அதிகாரிகளுக்கு இடமாற்றம்!



கொழும்பு, ஜூலை 04

பொலிஸ் பேச்சாளர் அஜித் ரோஹண உள்ளிட்ட 7 சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர்கள், ஒரு பிரதிப் பொலிஸ்மா அதிபர்கள் இடமாற்றம் பெற்றுள்ளனர்.

வட மத்திய மாகாணத்தின் பொறுப்பான சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் நந்தன முனசிங்க, பொலிஸ் நிர்வாக பிரிவுக்கு பொறுப்பான சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபராக இடமாற்றம் பெற்றுள்ளார்.

சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹன குற்றங்கள் மற்றும் போக்குவரத்துக்கு பொறுப்பான சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபராக.இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

இதுவரை அந்த பதவியை வகித்து வந்த சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் எல்.எஸ். பத்தினாயக்க, சமூக மற்றும் சுற்றுச்சூழல் பிரிவின் பொறுப்பதிகாரியாக நியமிக்கப்பட்டுள்ளார்.

வடக்கு மாகாணத்துக்கு பொறுப்பாக இருந்த சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் பி.பி.எஸ்.எம் தர்மரத்ன, வடமேற்கு மாகாணத்திற்கு பொறுப்பான சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபராக நியமிக்கப்பட்டுள்ளார். அத்துடன், வட மத்திய மாகாணத்திற்கு பொறுப்பான பதில் பிரதிப் பொலிஸ்மா அதிபராகவும் கடமையாற்றுவார்.

டபிள்யூ. கே. ஜெயலத் வடக்கு மாகாணத்துக்கு பொறுப்பான சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபராக நியமிக்கப்பட்டுள்ளார்.

ஆர்.எல். கொடித்துவக்கு சப்ரகமுவ மாகாணத்திற்கு பொறுப்பான சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபராக நியமிக்கப்பட்டுள்ளார். ஊவா மாகாணத்தின் பதில் பொறுப்பதிகாரியாகவும் அவர் கடமையாற்றுவார்.

சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் எம்.டி.ஆர்.எல். தமிந்த தெற்கு மாகாணத்திற்கு பொறுப்பான சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபராக நியமிக்கப்பட்டுள்ளார்.

மட்டக்களப்பு மாவட்டத்திற்கு பொறுப்பான பிரதி பொலிஸ்மா அதிபர் ஏ.என்.எல். விஜேசேன, அனுராதபுரம் மாவட்டத்தின் பொறுப்பான பிரதி பொலிஸ்மா அதிபராக நியமிக்கப்பட்டுள்ளார்.

# யாழில் 90 பேர் உட்பட வடக்கில் 128 பேருக்கு கொரோனா தொற்று

யாழ்ப்பாணம், ஜூலை 4

வடக்கு மாகாணத்தில் நேற்று முன்தினம் 128 பேருக்கு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டதாக கொவிட் 19 பரவலை தடுப்பதற்கான தேசிய செயல்பாட்டு மையத்தினால் நேற்று காலை வெளியிடப்பட்ட நாளாந்த நிலவர அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் - 90 , கிளிநொச்சி -11, முல்லைத்தீவு -11, வவுனியா -06 மற்றும் மன்னாரில் - 10 பேருக்கு நேற்று முன்தினம் தொற்று உறுதி செய்யப்பட்டதாகவும் நாளாந்த நிலவர அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

# வவுனியாவில் கற்குவாரியை நிறுத்துமாறு ஆர்ப்பாட்டம்!

வவுனியா, ஜூலை 04

வவுனியா புதிய சின்னக்குளம் மக்கள் நேற்று கற்குவாரிக்கு முன்பாக ஆர்ப்பாட்டம் ஒன்றில் ஈடுபட்டனர்.

தமது பிரதேசத்தில் குடிமனைகளுக்கு அருகாமையில் அமைந்துள்ள கற்குவாரியை அகற்றுமாறு கோரியே இந்த ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டது.

வவுனியா அக்போபர கிராமசேவகர் பிரிவுக்குட்பட்ட புதிய சின்னக்குளம் பகுதியில் உள்ள சிறிய மலைக் குன்றில் கல்லுடைப்பதால் பல்வேறு அசௌகரியங்கள் ஏற்படுவதாக கிராம மக்கள் குற்றம் சாட்டுகின்றனர்.

இது தொடர்பாக கருத்து தெரிவித்த கிராம மக்கள்-

குறித்த கற்குவாரியில் கல்லுடைப்பதால் பொதுமக்களின் வீடுகளில் வெடிப்புக்கள் ஏற்படுவதுடன் எந்தவித அறிவித்தலும் இன்றி வெடிவைத்து கற்களை உடைக்கும்போது அங்கிருந்து சிதறிவரும் கருங்கல் துண்டுகள் அருகில் உள்ள எமது வீடுகளின் கூரையில் விழுவதுடன் தோட்ட காணிகளுக்குள்ளும் விழுகின்றன.

அத்தோடு கற்களை உடைக்கப் பயன்படும் வெடிமருந்து காரணமாக சுவாசப் பிரச்னை ஏற்படுவதோடு குழந்தைகள் மயக்கமடையும் நிலையும் ஏற்படுவதுடன் மேய்ச்சலுக்கு சென்ற கால்நடைகளும் இறந்துள்ளன.

சுற்றுவட்டத்தில் இருக்கும் அனைத்து கிராமங்களுக்கும் குறித்த கற்குவாரியால் ஆபத்து ஏற்பட்டுள்ளது. எனவே குறித்த கல்குவாரியில் கல் உடைக்கும் நடவடிக்கைகளை தடுத்து நிறுத்துவதற்கு அதிகாரிகள் நடவடிக்கை எடுக்கவேண்டும் - என்றனர்.

இந்த ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் கற்குவாரியை நிறுத்து, வெடிபொருட்கள் பயன்படுத்தி கல் உடைப்பதை நிறுத்துங்கள், கற்குவாரியால் வீடுகள் சேதம், இயற்கை வளம் அழிக்கப்படுகிறது போன்ற பதாதைகளை ஏந்தியவாறு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

குறித்த இடத்திற்கு சென்ற வவுனியா - மாமடு பொலிஸ் அதிகாரி வெடிபொருட்கள் பயன்படுத்தி கல் உடைப்பதை தற்காலிகமாக நிறுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் தொடர்ந்து விசாரணைகள் முன்னெடுக்கப்படும் எனவும் கூறி ஆர்ப்பாட்டத்தை கைவிடுமாறு விடுத்த கோரிக்கைக்கு அமைவாக ஆர்ப்பாட்டம் கைவிடப்பட்டது.

(அ)

# கொரோனா தடுப்பில் பின்னடைவு; இராணுவத்தினரே முழுக் காரணம்!

## கோவிந்தன் கருணாகரம் எம்.பி. குற்றச்சாட்டு



**கொழும்பு, ஜுலை 04**

**கொரோனா கட்டுப்பாட்டுச் செயற்றிட்டத்தில் இராணுவத்தினரை இணைந்தமையானது, கொரோனாவைக் கட்டுப்படுத்துவதில் பின்னடைவையே ஏற்படுத்தியுள்ளதாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் கோவிந்தன் கருணாகரம் தெரிவித்துள்ளார்.**

மட்டக்களப்பில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

நாட்டில் கொரோனா அச்சுறுத்தல் ஏற்பட்ட நாள் முதல் சுகாதார பிரிவினர், அர்ப்பணிப்புடன் மக்களுக்கு சேவையாற்றி வருகின்றனர். இது பாராட்டத்தக்கதோர் விடயமாகும்.

இதேவேளை முதலாவது, இரண்டாவது அலையை கட்டுப்படுத்துவதில் காட்டிய தீவிரத்தை மூன்றாவது அலையை கட்டுப்படுத்துவதில் அரசாங்கம் காட்டவில்லை.

மேலும் இத்தகைய கொரோனா அச்சுறுத்தலான சூழ்நிலையில் சுகாதார அதிகாரிகள், சுகாதார வைத்திய அதிகாரிகள் தாங்கள் நினைத்ததை செய்யமுடியாத வகையில் அவர்களின் கைகள் கூட இராணுவத்தினரால் கட்டப்படுவதை நாங்கள் அறிவோம்.

மத்திய அரசாங்கத்தில் கூட துறைக்கு பொறுப்பான அமைச்சர்கள், கொரோனாவை கட்டுப்படுத்தும் விவகாரங்களில் தன்னிச்சையான முடிவுகளை எடுக்கமுடியாத நிலையில் உள்ளனர்.

கொவிட் செயலணிக்கு பொறுப்பாக இராணுவத் தளபதியை நியமித்தது மாத்திரமன்றி ஒவ்வொரு மாவட்டத்தையும் கண்காணிப்பதற்கு இராணுவ அதிகாரிகளை நியமித்தன் ஊடாக சுகாதார பிரிவினருக்கு கொவிட்டை கட்டுப்படுத்துவதற்கான நடவடிக்கையில் சில தடைகளும் ஏற்பட்டுள்ளன - என்றார்.(அ)

# தாதியர் சங்கங்கள் போராட்டத்தில் அரச வைத்தியர் சங்கம் அதிருப்தி

கொழும்பு, ஜுலை 04

அண்மைய நாட்களில் தொழிற்சங்க நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ள பல சுகாதாரத் துறை தொழிற்சங்கங்கள் மீது, அரசு மருத்துவ அதிகாரிகள் சங்கம் தனது ஏமாற்றத்தை வெளிப்படுத்தியுள்ளது.

கொழும்பில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போது பேசிய அரசு மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் துணைத் தலைவர் வைத்தியர் சமந்த ஆனந்த, நாடு ஒரு தொற்று நோயை எதிர்கொள்ளும் நேரத்தில் சுகாதாரத் துறை ஊழியர்கள் பொதுமக்களுக்கு சிரமத்தை ஏற்படுத்துகிறார்கள், இது ஏற்றுக்கொள்ள முடியா தது என்று கூறினார்.

வேலை தொடர்பான கோரிக்கைகளை வென்றெடுக்க போராட்டங்களை நடத்துவதற்கு இது பொருத்தமான நேரம் அல்ல என்று அவர் கூறினார்.

அரச தாதியர் உத்தியோகத்தர் சங்கத்தின் தலைவர் சமன் ரத்னபிரிய மற்றும் அரச மருத்துவ ஆய்வக தொழில்நுட்ப வல்லுநர்கள் சங்கத்தின் தலைவர் ரவி குமுதேஷ் ஆகியோர் பொறுப்பு கூறவேண்டிய இரண்டு தலைவர்கள், ஏனெனில் அவர்கள் சுகாதாரத் துறையில் முரண்பாடுகளை உருவாக்கியுள்ளனர். இதனால் மருத்துவ பணியாளர்கள் தங்கள் நடவடிக்கைகளுக்கு விமர்சிக்கப்படுகிறார்கள் என்றும் அவர் குறிப்பிட்டார்.

சுகாதாரத் துறை மக்களின் நலனுக்காக செயல்படும் என்று பொதுமக்கள் எதிர் பார்க்கிறார்கள் என்று கூறினார். (அ)

# திருகோணமலையில் இளைஞன் கைது

கொழும்பு, ஜுலை 04

தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பு குறித்து சமூக ஊடகங்கள் மூலம் பல்வேறு தகவல்களை பரிமாறிய குற்றச்சாட்டில் 24 வயதுடைய இளைஞன் கைது செய்யப்பட்டுள்ளார்.

இவ்வாறு கைது செய்யப்பட்டவர் திருகோணமலை பகுதியைச் சேர்ந்த ஒட்டோ சாரதி என பொலிஸ் பேச்சாளர் சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்தார்.

விடுதலைப் புலிகள் அமைப்பு மற்றும் அதன் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனை பேஸ்புக் குழுக்கள் மற்றும் வட்ஸ் அப் குழுக்கள் வழியாக ஊக்குவிக்கும் வகையில் குறித்த இளைஞன் செயற்பட்டதாக பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

இந்நிலையில் பயங்கரவாத தடுப்புச் சட்டம் மற்றும் சிவில் மற்றும் அரசியல் உரிமைகள் தொடர்பான சர்வதேச உடன்படிக்கையின் கீழ் குறித்த இளைஞன் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் கூறினர்.

சந்தேகநபர் தற்போது பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ளதாகவும் அஜித் ரோஹண மேலும் தெரிவித்தார்.

# கொரோனா தொற்றில் இருந்து மேலும் 1,853 பேர் குணமடைவு

கொழும்பு, ஜுலை 04

நாட்டில் கொரோனா தொற்றில் இருந்து கடந்த 24 மணிநேரத்தில் மேலும் 1,853 பேர் குணமடைந்துள்ளனர்.

இதனையடுத்து கொரோனா தொற்றில் இருந்து குணமடைந்தோரின் மொத்த எண்ணிக்கை 2 இலட்சத்து 31 ஆயிரத்து 394 ஆக உயர்ந்துள்ளது.

நாட்டில் தற்போது அடையாளம் காணப்பட்டுள்ள 2 இலட்சத்து 62 ஆயிரத்து 795 நோயாளர்களில் 3,157 பேர் உயிரிழந்துள்ளனர். (அ)

# வன்முறை கும்பலினால் கைவிடப்பட்ட வாள்கள்!

யாழ்ப்பாணம், ஜுலை 04

வன்முறைக் கும்பல் ஒன்றினால் கைவிடப்பட்ட 4 வாள்கள் மீட்கப்பட்டுள்ளன என்று யாழ்ப்பாணம் சுன்னாகம் பொலிஸார் தெரிவித்தனர்.

தாவடி - தோட்டவெளியில் அவை நேற்று அதிகாலை மீட்கப்பட்டுள்ளன.

மருதனார்மடம் சந்தைக்குப் பின்புறமாக உள்ள வீடொன்றுக்குள் புகுந்து தாக்குதல் நடத்தியகும்பலைச் சேர்ந்தோர் அடையாளம் காணப்பட்ட நிலையில் அவர்களைத் தேடிச் சென்றபோதே வாள்கள் மீட்கப்பட்டுள்ளன.

சம்பவம் தொடர்பில் சுன்னாகம் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

# ரஞ்சனுக்குப் பொதுமன்னிப்பு; ஜனாதிபதி பரிசீலிக்கவேண்டும்

## கரு ஜயசூரிய கோரிக்கை

கொழும்பு, ஜுலை 04

முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ரஞ்சன் ராமநாயக்கவுக்கு பொதுமன்னிப்பு வழங்குவது குறித்து பரிசீலிக்குமாறு, நியாயமான சமூகத்துக்கான தேசிய இயக்கம் ஜனாதிபதியைக் கேட்டுள்ளது.

நியாயமான சமூகத்திற்கான தேசிய இயக்கத்தின் தலைவரும் முன்னாள் சபாநாயகருமான கரு ஜயசூரிய அறிக்கை ஒன்றை வெளியிட்டு குறித்த வேண்டுகோளை விடுத்துள்ளார்.

நீதிமன்ற அவமதிப்பு வழக்கில் சிறைத்தண்டனை வழங்கப்பட்டுள்ள ரஞ்சன் ராமநாயக்க தெற்காசியாவில்



நன்கு அறியப்பட்ட நடிகர் என்றும் மிகவும் தாழ்மையான நபர் என்றும் கரு ஜயசூரிய சுட்டிக்காட்டியுள்ளார்.

எனவே, இந்த கோரிக்கையை ரஞ்சன் ராமநாயக்க சார்பிலான முறையீடாக எண்ணி அதனை பரிசீலிக்குமாறு கரு ஜயசூரிய, ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

# மணி, மயூரனை காங்கிரஸிலிருந்து நீக்கியமை: இடைக்காலக் கட்டளையை ஆட்சேபித்து மனு

யாழ்ப்பாணம், ஜுலை 04

யாழ்ப்பாணம் மாநகர சபையின் உறுப்பினர் சட்டத்தரணி விஸ்வலிங்கம் மணிவண்ணன் மற்றும் மயூரன் இருவரையும் அந்தப் பதவியிலிருந்து நீக்கும் அகில இலங்கை தமிழ் காங்கிரஸின் தீர்மானத்துக்கு மாவட்ட நீதிமன்றம் வழங்கிய இடைக்காலத் தடைக் கட்டளையை ஆட்சேபனைக்கு உட்படுத்தி உயர் நீதிமன்றில் மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன.

அகில இலங்கை தமிழ் காங்கிரஸின் முதலாவது மேன்முறையீட்டு அனுமதி விண்ணப்பங்களை யாழ்ப்பாணம் குடியியல் மேன்முறையீட்டு மேல் நீதிமன்றில் தாக்கல் செய்தது. அவை தள்ளுபடி செய்யப்பட்ட நிலையில் கட்சியின் இறுதி சந்தர்ப்பமாக உயர் நீதிமன்றில் மேன்முறையீட்டு அனுமதி விண்ணப்பங்கள் செய்யப்பட்டுள்ளன.

அகில இலங்கை தமிழ் காங்கிரஸின் சார்பில் யாழ்ப்பாணம் மாநகர சபைக்குத் தேர்ந்து அனுப்பப்பட்ட வி.மணிவண்ணன், உள்ளிட்ட உறுப்பினர்கள் தமது பங்காளிக் கட்சியான தமிழ் தேசிய மக்கள் முன்னணியிலிருந்து நீக்கப்பட்டதால் மாநகர சபை உறுப்பினர் பதவியிலிருந்து நீக்குமாறு அந்தக் கட்சி, யாழ். தெரிவத்தாட்சி அலுவலரிடம் கேட்டுக்கொண்டது.

அதனடிப்படையில் வி.மணிவண்ணனின், மயூரன் உள்ளிட்டவர்கள் யாழ்ப்பாணம் மாநகர சபை உறுப்பினர் பதவி வறிதாகியதாக யாழ்ப்பாணம் தெரிவத்தாட்சி அலுவலகரால் அவருக்கு அறிவிக்கப்பட்டது.

தனது உறுப்புரிமை நீக்கத்தை சவாலுக்குட்படுத்தி யாழ். மாவட்ட நீதிமன்றில் சட்டத்தரணி வி.மணிவண்ணன், சிறப்பு மனுவை தானே தாக்கல் செய்தார். ஏனைய சக உறுப்பினர்களுக்கும் அவர் தனித்தனியே மனுக்களைத் தாக்கல் செய்தார்.

மனுக்களின் பிரதிவாதிகளாக அகில இலங்கை தமிழ் காங்கிரஸின் தலைவர் ஆனந்தராசா, பொதுச் செயலாளர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம், யாழ்ப்பாணம் தெரிவத்தாட்சி அலுவலகர் உள்ளிட்ட நான்கு தரப்பினரை மனுதாரர்கள் குறிப்பிட்டிருந்தனர்.

தனது பதவி நீக்கத்தை சட்ட வலுவற்றதாக உத்தரவிடுமாறு கோரிய மனுதாரர், அதன் மீதான விசாரணை நிறைவடைந்து இறுதிக் கட்டளை வரும் வரை இடைக்காலத் தடைக் கட்டளையை வழங்குமாறும் கோரியிருந்தார்.

அதனை ஏற்று யாழ். மாவட்ட நீதிமன்றம் ஆரம்பத்தில் கட்டாணை வழங்கி பிரதிவாதிகளின் ஆட்சேபனை விண்ணப்பத்தின் பின்னர் இடைக்காலக் கட்டளையை வழங்கியது.

மாவட்ட நீதிமன்றம் வழங்கிய இடைக்காலக் கட்டளையை ஆட்சேபித்து அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் சார்பில் யாழ்ப்பாணம் குடியியல் மேன்முறையீட்டு நீதிமன்றில் மேன்முறையீட்டு அனுமதி விண்ணப்பங்கள் தாக்கல் செய்யப்பட்டன.

இந்த விண்ணப்பங்கள் மேல் நீதிமன்ற நீதிபதிகள் பாலேந்திரன் சசி மகேந்திரன், தாவூத் லெப்பை அப்துல் மனாப் ஆகியோர் அடங்கிய யாழ்ப்பாணம் குடியியல் மேன்முறையீட்டு மேல் நீதிமன்ற அமர்வின் முன் விவாதங்கள் இடம்பெற்றன.

அமர்வு கடந்த மார்ச் 31ஆம் திகதி அதன் கட்டளையை வழங்கியது.

சட்டத்தரணி வி. மணிவண்ணன், மயூரன் ஆகியோரை யாழ்ப்பாணம் மாநகர சபையின் உறுப்பினர் பதவியிலிருந்து நீக்கும் அகில இலங்கை தமிழ் காங்கிரஸ்ன் தீர்மானத்துக்கு மாவட்ட நீதிமன்றம் வழங்கிய இடைக்காலத் தடைக் கட்டளையை உறுதி செய்தது.

அத்துடன் அதனை எதிர்த்து அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் சார்பில் சமர்ப்பிக்கப்பட்ட மேன்முறையீட்டு அனுமதி விண்ணப்பங்களை யாழ்ப்பாணம் குடியியல் மேன்முறையீட்டு மேல் நீதிமன்றம் தள்ளுபடி செய்தது.

இந்த நிலையிலேயே அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் தமது சட்டத்தரணி ஊடாக உயர் நீதிமன்றில் மேன்முறையீட்டு அனுமதி விண்ணப்பங்களை தாக்கல் செய்துள்ளன.

அதனடிப்படையில் உயர் நீதிமன்றினால் வழக்காளி - எதிர்மனுதாரர்களான சட்டத்தரணி வி.மணிவண்ணன், மயூரன் ஆகியோருக்கு அறிவித்தலை அனுப்பிவைத்துள்ளது. (அ)

# கட்டுப்பாடு தளர்வு குறித்து இதுவரை தீர்மானமில்லை!

## ஹேமந்த ஹேரத் கூறுகின்றார்



கொழும்பு, ஜூலை 04

**தற்போது அமுலுள்ள கட்டுப்பாடுகளை தளர்த்துவது குறித்து இதுவரை எவ்வித தீர்மானங்களும் எடுக்கப்பட வில்லை என சுகாதார சேவைகள் பிரதிப் பணிப்பாளர் நாயகம் விசேட வைத்திய நிபுணர் ஹேமந்த ஹேரத் தெரிவித்தார்.**

கொழும்பில் நடைபெற்ற ஊடக சந்திப்பில் கருத்து தெரிவித்த அவர், நாட்டில் தற்போது டெல்டா தொற்றின் அச்சுறுத்தல் தொடர்ந்தும் காணப்படுவதாகவும் கூறினார்.

இதுவரை 05 பேருக்கு டெல்டா தொற்று ஏற்பட்டுள்ளதாகவும், அந்த தொற்று மேலும் பரவலடைவதை தடுப்பதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவேண்டும் எனவும் அவர் சுட்டிக்காட்டினார்.

இதேவேளை, இன்று முதல் மாகாணங்களுக்கு இடையிலான பயணக் கட்டுப்பாடுகளை தளர்த்துவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

எவ்வாறாயினும் இந்த விடயம் தொடர்பாக இதுவரை எந்தவித இறுதித் தீர்மானங்களும் மேற்கொள்ளப்படவில்லை என இராணுவத் தளபதி ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித்துள்ளார்.

# பிறந்தநாள் கொண்டாடிய 19பேர் தனிமைப்படுத்தல்

## அல்லைப்பிட்டியில் சம்பவம்

யாழ்ப்பாணம், ஜூலை 04

அல்லைப்பிட்டியிலுள்ள நட்சத்திர விடுதி ஒன்றில் பிறந்தநாள் கொண்டாடிய 19பேர், அதே விடுதியில் சுயதனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர்.

யாழ்ப்பாணத்திலிருந்து சென்ற 19பேர், அல்லைப் பிட்டியிலுள்ள நட்சத்திர விடுதியில், நண்பர் ஒருவரின் பிறந்தநாளை கொண்டாடுவதற்கு முற்பட்டுள்ளனர்.

இதன்போது சம்பவம் அறிந்து அவ்விடத்துக்கு சென்ற பொதுச் சுகாதாரப் பரிசோதகர் மற்றும் ஊர்காவற்றுறை பொலிஸார், தனிமைப்படுத்தல் விதிமுறைகளை மீறியதாக குற்றம் சாட்டி அவர்களை அந்த விடுதியிலேயே தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தினர்.

மேலும் நட்சத்திர விடுதியும் தனிமைப்படுத்தப்பட்டுள்ளதுடன் சுயதனிமைப்படுத்தப்பட்ட அனைவருக்கும், பி.சி.ஆர்.பரிசோதனை முன்னெடுக்கப்படும் என்று சுகாதாரத் துறை அறிவித்துள்ளது. (அ)

# டெல்டாவால் பாதிக்கப்பட்ட மேலும் ஒருவர் கண்டுபிடிப்பு

கொழும்பு, ஜூலை 04

டெல்டா என அழைக்கப்படும் பயங்கரமான இந்திய மாறுபாட்டு வைரஸால் பாதிக்கப்பட்டதாக சந்தேகிக்கப்படும் ஒரு கொரோனா நோயாளி வெல்லம்பிட்டியவில் கிட்டம்ப ஹூவ பகுதியில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாக சுகாதார அதிகாரிகள் தெரிவித்தனர்.

குறித்த வைரஸால் பாதிக்கப்பட்ட 38 வயதான ஆண் நோயாளி பொரளையில் உள்ள ஒரு ஆடைத் தொழிற்சாலையில் பணிபுரிகிறார் என்று அப்பகுதிக்கு பொறுப்பான பொதுச் சுகாதார பரிசோதகர் தெரிவித்தார்.

"தொழிற்சாலையில் செய்யப்பட்ட பி.சி.ஆர் பரிசோதனையின் பின்னரே அந்த நபர் அடையாளம் காணப்பட்டார். நாங்கள் தற்போது பாதிக்கப்பட்ட நபருடன் தொடர்புகளை பேணியோரை அடையாளம் காணும் பணியில் ஈடுபட்டுள்ளோம்" என்றும் அவர் குறிப்பிட்டார்.

அந்தப் பகுதியில் இருந்து வைரஸ் பரவாமல் தடுக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாகவும் அவர் கூறினார்.

# சஜித்தை மீண்டும் இணையுமாறு ஐக்கிய தேசியக் கட்சி அழைப்பு

கொழும்பு, ஜூலை 04

ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவரும் எதிர்க்கட்சி தலைவருமான சஜித் பிரேமதாஸவுக்கு ஐக்கிய தேசியக் கட்சி மீண்டும் ஒரு முக்கிய அழைப்பு விடுத்துள்ளது.

நேற்று முன் தினம் பிற்பகல் இடம்பெற்ற ஊடக சந்திப்பில், கட்சியின் பிரதித் தலைவர் ருவான் விஜேவர்தன மற்றும் பொதுச் செயலாளர் பாலித ரங்கே பண்டார ஆகியோர் இந்த அழைப்பை விடுத்தனர்.

"அவரது மூதாதையர் வீட்டுக்கு திரும்பி வரவேண்டும். தற்போதைய நெருக்கடியிலிருந்து நாட்டைக் காப்பாற்ற எங்களுடன் சேரவேண்டும்" என்றும் அவர்கள் அழைப்பு விடுத்தனர்.

மறுபடியும் கட்சியில் இணைவதற்கு வெட்கமடையத் தேவையில்லை என்றும் பாலித ரங்கே பண்டார குறிப்பிட்டார்.



இதேவேளை, ஐக்கிய மக்கள் சக்தியில் சேர்ந்த பல உள்ளூராட்சி உறுப்பினர்கள் ஐக்கிய தேசியக் கட்சிக்கு திரும்பி வரத் தொடங்கியுள்ளனர் என ருவான் விஜேவர்தன தெரிவித்தார்.

# கம்பஹாவில் தொற்றாளர்கள் அதிகரிப்பு

இனங்காணப்பட்ட கொவிட் தொற்றாளர்களில் அதிகளவான தொற்றாளர்கள் கம்பஹா மாவட்டத்தில் பதிவாகி உள்ளதாக கொவிட் 19 பரவலை தடுக்கும் தேசிய செயற்பாட்டு மத்திய நிலையம் தெரிவித்துள்ளது.

இதற்கமைய கம்பஹா மாவட்டத்தில் நேற்று முன் தினம் 267 கொவிட் தொற்றாளர்கள் பதிவாகி இருந்தனர்.

நேற்று முன் தினம் நாட்டில் மொத்தமாக 1,823 பேருக்கு கொவிட் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

அத்துடன் நேற்று முன்தினம் தொற்றுக்கு உள்ளானவர்களுள் 86 பேர் வெளிநாடுகளில் இருந்து வருகை தந்தவர்கள் என தெரிவிக்கப்படுகின்றது.

# துப்பாக்கிச் சூட்டில் ஒருவர் உயிரிழப்பு



கொழும்பு, ஜூலை 04

ஊருகஸ்மங்ஹன்திய தேவத்த பகுதியில் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி ஒருவர் உயிரிழந்துள்ளார் என்று பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

நேற்றுமுன்தினம் இரவு 10.30 மணியளவில் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

போதைப்பொருள் பாவ னைக்கு அடிமையான நபரே உயிரிழந்துள்ளார் என்று பொலிஸ் ஊடகப் பிரிவு மேலும் தெரிவித்துள்ளது.

குறித்த நபர் தனது வீட் டுக்கு அருகில் நின்று கொண்டிருந்த போது துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகியுள்ளார்.

இந்தச் சம்பவம் தொடர்பில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (இ)

# கசிப்பு உற்பத்தியில் ஈடுபட்ட மூவர் மடுல்சீமையில் கைது

மடுல்சீமை, ஜூலை 04.

கசிப்பு உற்பத்தியில் ஈடுபட்ட மூவரை மடுல்சீமைப் பொலிஸார் நேற்று முற்பகல் கைது செய்துள்ளனர். அத்துடன் கசிப்பு மற்றும் கசிப்பு உற்பத்திக்காகப் பயன்படுத்தப்பட்ட உபகரணங்களையும் அவர்கள் மீட்டுள்ளனர்.

மடுல்சீமைப் பகுதியின் விராலிபத்தனை பெருந்தோட்டத்திலேயே இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

மடுல்சீமைப் பொலிஸாருக்குக் கிடைக்கப்பெற்ற தகவலொன்றையடுத்து பொலிஸார் விராலிபத்தனை பெருந்தோட்டப் பகுதிக்கு விரைந்து, குறிப்பிட்ட இடத்தைச் சுற்றிவளைத்தனர்.

அவ்வேளையிலேயே, தயார் நிலையில் வைக்கப்பட்டிருந்த 375 மில்லிலீற்றர் கசிப்பும், ஆயிரம் மில்லிலீற்றர் கொண்ட கசிப்பு தயாரிக்கும் மூலத்திரவ மான கோடாவும் மீட்கப்பட்டன. கசிப்பு தயாரித்துக் கொண்டிருந்த மூவரும் கைது செய்யப்பட்டனர்.

அத்துடன், எரிவாயு சிலிண்டர் ஒன்று, அடுப்பு ஒன்று, பீப்பாய்கள் மற்றும் உபகரணத் தொகுதிகளையும் பொலிஸார் மீட்டனர். (இ)

# ஒரே குடும்பத்தை சேர்ந்த 5 பேர் உட்பட 29 பேருக்கு வவுனியாவில் கொரோனா

வவுனியா, ஜூலை 04

வவுனியாவில் கர்ப்பவதி பெண் உள்ளிட்ட ஒரே குடும்பத்தைச் சேர்ந்த 5 பேர் உட்பட 29 பேருக்கு கொவிட் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

வவுனியாவில் இனங்காணப்பட்ட கொவிட் தொற்றாளர்களுடன் தொடர்புகளைப் பேணியவர்கள், வைத்திய சாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டவர்கள் மற்றும் எழுமாறாக மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர் பரிசோதனையின் முடிவுகள் நேற்று முன் தினம் இரவு வெளியாகின.

அதில், ஓமந்தை அரசன் குளம் பகுதியில் ஒருவருக்கும், நெடுங்கேணி பகுதியில் ஒருவருக்கும், குருமன்காடு பகுதியில் ஒரு கர்ப்பவதி உட்பட ஒரே வீட்டில் ஐந்து பேருக்கும், பனிக்கர்மகிழங்குளம் பகுதியில் ஒருவருக்கும், சாந்தசோலை பகுதியில் ஒருவருக்கும், கூமாங்குளம் பகுதியில் இருவருக்கும், மன்னகுளம் பகுதியில் ஒருவருக்கும், வேப்பங்குளம் பகுதியில் ஒருவருக்கும், மதவாச்சி பகுதியில் ஒருவருக்கும், குட்செட் வீதி பகுதியில் இருவருக்கும், கோதாண்டார்நொச்சிக் குளம் பகுதியில் ஒருவருக்கும், சமயபுரம் பகுதியில் ஒருவருக்கும், உக்குளாங்குளம் பகுதியில் ஒருவருக்கும், திருநாவற்குளம் பகுதியில் ஒருவருக்கும், பட்டானிச்சூர் பகுதியில் ஒருவருக்கும், உளுக்கொட்டேன பகுதியில் ஒருவருக்கும், வைரவபுளியங்குளம் பகுதியில் ஒருவருக்கும், ஆச்சிபுரம் பகுதியில் ஒருவருக்கும், பண்டாரிக்குளம் பகுதியில் ஒருவருக்கும், புகை யிரத நிலைய விடுதியில் ஒரு வருக்கும் என 29 பேருக்கு தொற்று உறுதிசெய்யப்பட்டுள்ளது.

தொற்றாளர்களை கொரோனாச் சிகிச்சை நிலையத்துக்கு அனுப்பி வைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதுடன், அவர்களுடன் தொடர்புடையவர்களை தனிமைப்படுத்தவும் சுகாதாரப் பிரிவினர் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

# இராஜதந்திர உத்திகளால் இந்தியாவை வெற்றிகண்ட இலங்கை

பேராசிரியர் கே.ரீ.கணேசலிங்கம்



இந்திய - இலங்கை உறவின் போக்கானது இராஜதந்திர ரீதியானதாகவே நகர்கிறது. இந்தியாவைக் கையாளும் திறன் இலங்கை ஆட்சித் துறைக்கு சாதாரணமானதாக அமைந்தமையை கடந்த காலம் முழுவதும் அவதானிக்க முடிந்தது. இரண்டுமே அரசுகள் என்ற அடிப்படையில் செயல்படுவதுடன் வளங்கள் மற்றும் அளவுத் தன்மையில் பெரும் வேறுபாடு இரு அரசுகளுக்கிடையே நிலவிய போதும் இராஜதந்திர ரீதியில் சமவலுவுடைய அரசுகளாகவே இரு நாடுகளும் காணப்படுகின்றன. அதிலும் இலங்கை, இந்தியாவைவிட தனது எல்லைக்குள் இராஜதந்திரத்தில் விஞ்சியுள்ளதை காணமுடிகின்றது.

இதற்கான ஆரம்பத்தை மகாநாம தேரர் வரைந்த மகாவம்சத்தில் தொடங்கிய போதும், நவீன இலங்கையின் வெளியுறவின் தனித்துவத்தை பேராசிரியர் செல்ரன் கொடிகார ஏற்படுத்தியிருந்தார். இந்தியாவின் முக்கியத்துவத்தைக் கருதி அதனைக் கையாளுதலே இலங்கையின் கடந்த எழுபது வருட இராஜதந்திரமாகும். இந்தக் கட்டுரையும் சமகாலத்தில் இந்தியாவை இலங்கை தனது இராஜதந்திர உத்தியால் வெற்றி கண்டுள்ளதை நிறுவுவதாக அமையவுள்ளது.

சமகாலத்தில் எழுந்த இந்திய - இலங்கைக்கு இடையிலான உரையாடல்களை அவதானிக்கும் போது இலங்கையில் ஏற்பட்டுவரும் சீனாவின் பிரசன்னம் இந்தியாவின் தேசிய பாதுகாப்புக்கு ஆபத்தானது என்று முன்மொழியப்பட்டுள்ளது. அதனை இந்திய கடற்படைத் தளபதி மட்டத்திலான அதிகாரிகளும் பின்பு இந்திய வெளியுறவு பேச்சாளரும் இலங்கைக்கான இந்தியத் தூதுவரும் வெளிப்படுத்தியிருந்தனர். இதனைக் கண்காணிப்பதற்கு இந்தியா ஆளில்லாத விமானங்களை கொள்வனவு செய்து ரோந்து நடவடிக்கையில் ஈடுபடப் போவதாக இலங்கையின் அமைச்சரவைப் பேச்சாளர் ஊடகங்கள் எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கும் போது தெரிவித்திருந்தார் என்பதும் வாசகர்களுக்குத் தெரிந்த விடயமே. அது மட்டுமன்றி இலங்கையின் கேந்திர நிலைகளை நோக்கி சீனா நுழைவதாகவும் குற்றச்சாட்டை இந்தியா முன்வைத்தது.

இதனை அடுத்து கடந்த இரு வாரமாக பேச்சுக்களும் கடற்படை கப்பல்களின் கொழும்பு துறைமுகம் நோக்கிய நகர்வுகளையும் இந்தியா மேற்கொண்டது. மேலும், இலங்கை மீனவர் மீதான தாக்குதல்களை இந்திய கடற்படை மேற்கொண்டதுடன் இலங்கை மீனவர்களை கைது செய்ததாகவும் செய்திகள் வெளியாகின. இது தொடர்பில் பேச்சும் நிகழ்ந்ததாக தகவல்கள் உண்டு.

இதேநேரம் கேணல் ஹரிகரன் போன்றவர்கள் சீனா இலங்கையில் வர்த்தக நடவடிக்கையிலேயே ஈடுபடுவதாகக் கூறிவந்த நிலை மாறி கொழும்பு துறைமுக நகருக்குள் சீனா அதன் பிரசன்னத்தை வலுப்படுத்தும் நிலையில் இலங்கை அரசியல் செயல்பாடுகளிலும் அதன் செல்வாக்கை அதிகரிக்கும் என்று நாம் எதிர்பார்க்க முடியும் என்று கூறும் நிலைக்குள் தள்ளப்பட்டுள்ளனர். அது மட்டுமன்றி கேணல் ஹரிகரன் கொழும்பு துறைமுக நகரத்தினால் தோற்றுவிக்கக்கூடிய பீதி வெறுமனே தென்னிந்தியாவுக்கு மாத்திரமானதல்ல. முழு இந்தியாவுக்குமானது என்றார்.

இதனால் கொள்கைமாற்றம் ஏதும் நிகழும் என்று எதிர்பார்க்கப்பட்டது. ஆனால், அவை அனைத்தும் இந்திய - இலங்கை வெளியுறவு அமைச்சுக்களின் பேச்சின்போது முடிவுக்கு வந்துள்ளதாகவே தெரிகிறது. அதனை சற்று விரிவாக நோக்குவோம்.

முதலாவது - இந்திய வெளியுறவு அமைச்சர், இலங்கை வெளியுறவு அமைச்சருடன் உரையாடிய விடயமாக இரு தரப்பு மற்றும் பிராந்தியம் பற்றியதாக அமைந்திருந்தன. இரு வெளியுறவு அமைச்சர்களுக்கும் இடையிலான உரையாடலில் நெருக்கமான தொடர்பை (Close Touch) பின்பற்ற இலங்கை முன்வந்திருப்பதாக ருவிட்டரில் இந்திய வெளியுறவு அமைச்சர் தெரிவித்திருந்தார். குறிப்பாக BIMSTEC மற்றும் IORA போன்ற பிராந்திய அமைப்புக்கள் பற்றி உரையாடப்பட்டதாகவும் அதற்கான ஒத்துழைப்பை இலங்கை வழங்க முன்வந்திருப்பதாகவும் இந்திய வெளியுறவு அமைச்சர் தெரிவித்துள்ளார்.

இரண்டாவது - வெளியுறவு மட்டத்திலான இலங்கை - இந்திய உரையாடல் இலங்கை வெளியுறவு அமைச்சரால் வரவேற்கப்பட்டதுடன் இரு தரப்பு உறவுக்கான நெருக்கம் அதிகரித்தது எனவும் கோவிட் தொற்றுக்கு வழங்கிய தடுப்பூசிக்கு இலங்கை தரப்பு இந்தியாவுக்கு நன்றி தெரிவித்தமையையும் அவதானிக்க முடிந்தது. இலங்கை எப்போதும் இந்தியாவைக் கையாளுவதற்காக இத்தகைய உபாயங்களை பயன்படுத்துவது வழமையாக உள்ளது. இதனை ஓர் இராஜதந்திரமாகக் கருதலாமா என்பது சந்தேகமானதே. மாறாக இதனை உபாயமாகவே கருத முடியும். இலக்கை அடைவதற்கான உபாயமாகவே அமைந்துள்ளது.



அதாவது தற்போதைய இலங்கை அரசாங்கம் ஆட்சிக்கு வரும்போது தெளிவாகக் குறிப்பிட்டது இலங்கையின் வெளியுறவில் இந்தியா முதலிடம் என்று. நடைமுறையில் அத்தகைய முதலிடத்தை சீனாவுக்கு வழங்கியதுடன் இந்தியாவுக்கு எதிரான கொள்கையையும் கடைப்பிடிக்க ஆரம்பித்தது. இதனை இலங்கை ஒருபோதும் வெளிப்படையாக மேற்கொண்டது கிடையாது. அனைத்தையும் இரகசியமாகவே நகர்த்துகிறது.

மூன்றாவது - சீனா - இலங்கை இடையிலான வர்த்தக பொருளாதார மற்றும் கேந்திர நிலைகள் தொடர்பான உறவை இந்தியாவுக்கு ஆபத்தானதென குறிப்பிட்ட இந்தியத் தரப்பு அத்தகைய இந்தியாவின் குற்றச்சாட்டுக்களை இலங்கை ஏற்றுக் கொண்டு இந்தியாவுடன் ஒத்துழைப்பதாக தெரிவித்த கருத்துக்களை அங்கீகரித்துக் கொண்டது. அதாவது, இலங்கையின் உத்தரவாதப் படுத்தப்படும் விடயங்களை இந்தியா மாற்று விவாதமின்றி ஏற்கொண்டது. கடந்த காலத்திலும் இந்தியாவுக்கு உத்தரவாதங்களையும் உறுதிமொழிகளையும் இலங்கை வழங்கி வந்துள்ளது. அதன்படி நடந்து கொள்ள முன்வராதபோதும் இந்தியா மீளவும் அதனை ஏற்றுக் கொண்டது. இதுவே, இந்தியாவின் கொல்லைப்புறத்தில் சீனாவின் விஸ்தரிப்பு ஏற்பட காரணமாகியது.

நான்காவது - இலங்கையில் இந்தியாவின் விரோத சக்தியாக விளங்கும் சீனாவின் பிரசன்னம் அதிகரிக்கும் போது இந்திய வெளியுறவு அமைச்சர் இலங்கை வெளியுறவு அமைச்சருடன் உரையாடியது பிராந்திய பாதுகாப்புப் பற்றியதாகவே உள்ளது. குறைந்தபட்சம் சீனாவின் பிரசன்னம் தொடர்பில் அதிருப்தி நிலவுவதாக இலங்கைக்கான இந்தியத் தூதுவர் மற்றும் இந்திய கடற்படை அதிகாரிகள் குறிப்பிட்ட அளவுக்கேனும் இந்திய வெளியுறவு அமைச்சர் தெரிவித்ததாக தகவல்கள் வெளியாகவில்லை. அப்படியாயின் சீன - இந்திய உறவு பாதித்துவிடக் கூடாதென்பதில் இந்திய வெளியுறவு அமைச்சர்“ அக்கறையுடன் செயல்படுவதாகவே தெரிகிறது. அது மட்டுமல்லாது இலங்கை - இந்திய உறவிலும் பாதிப்பு ஏற்பட்டுவிடக் கூடாதென்பதில் அக்கறை கொள்வதாகவே தெரிகிறது. இதில், சீனாவின் இலங்கை மீதான செல்வாக்கு என்பது வெறுமையான அரசியல் பிரமைகளாகவே தெரிகிறது. அதனால் இந்தியாவுக்கு எந்தப் பாதிப்பும் ஏற்படப் போவதில்லை என இந்திய ஆளும் வர்க்கம் கருதுகிறது.

கொழும்பு துறைமுக நகரத்தில் முதலீடு தொடர்பில் போட்டி நிலவுவதாக தகவல்கள் உண்டு. அதிலும் பிரித்தானியா, அமெரிக்கா ஜப்பான் மற்றும் இந்தியாவுக்கும் பிற நாடுகளின் கம்பனிகளுக்குமிடையில் போட்டி நிலவுவதாகத் தெரியவருகிறது. நிதி முதலீட்டுக்கான பிரயத்தனங்களை கொழும்பு துறைமுகம் நோக்கி நாடுகள் போட்டியிட ஆரம்பித்துள்ளன. அது மட்டுமன்றி இந்திய துறைமுகங்களுக்கு இடையிலான கடல் வர்த்தகத்தின் பெரும் பரிமாற்றம் கொழும்பு துறைமுகம் ஊடாகவே நிலவுகிறது. எனவே, இவை எதுவும் பாதித்துவிடக்கூடாது என்ற நோக்கிலான உரையாடலாகவே இந்திய - இலங்கை வெளியுறவு அமைச்சர்களுக்கிடையில் நிலவியது. அதனை கொள்கை மாற்றம் என்றோ அல்லது இலங்கைக்கு எதிரானதென்றோ கருதுவது மிக மோசமான பலவீனமாகும்.

இலங்கையைப் பொறுத்தவரை எப்போதும் இந்தியாவை கையாள்வதற்கு சில பொறிமுறைகளைக் கொண்டுள்ளது. குற்றச்சாட்டுக்களை ஏற்றுக் கொள்வது, ஒத்துழைப்பதென உத்தரவாமளிப்பது, காலம் தாழ்த்துவது - பிற்போடுவது, பிற நாடுகளுடன் சேர்ந்து கொண்டு செயல்படுவது. பொருளாதார நெருக்கடியையும் - பொருளாதார உதவியையும் இந்தியாவிடம் கோருவது. மேற்குறித்த அனைத்தும் இந்தியாவுக்கு போதுமானது. இந்தியா இலங்குவில் பின்வாங்கி விடுவதுடன் இலங்கைக்கு நெருக்கடி கொடுத்தால் முழுமையாக விலகிவிடும் எனக் கருதுகிறது.

எனவே, தற்போதைய இந்தியாவின் போக்கானது இந்திய ஆளும்வர்க்கத்தின் நலனாகும். அதனை அடைவதற்கான உரையாடல்களே நிகழ்கின்றது. அதனை இலங்கைக்கு எதிரானது எனக் கணக்கிடுவதை விடுத்து அதன் யதார்த்த அரசியலை கவனத்தில் கொள்ளுதல் வேண்டும். இலங்கையும் தனக்கான வாய்ப்புக்களை இடைவிடாது பயன்படுத்துவதுடன் இந்தியாவைக் கையாளும் திறனுடைய நாடாக விளங்குகிறது.

இலங்கையிலிருந்து இந்தியாவை அகற்றுவதற்கான வாய்ப்புக்கள் பலதடவை கிடைத்த போதும் இந்தியா அவற்றை தவறவிடுகிறது. இது இந்தியாவின் இயலாமை மட்டுமன்றி இந்திய ஆளும் வர்க்கத்தின் நலன்களை அடைவதற்கான அரசியலாகவே தெரிகிறது. அதாவது, கம்பனிகளினதும் பல்தேசியக் கம்பனிகளினதும் கூட்டு அதிகாரத்துக்குள் இந்திய அரச இயந்திரம் அகப்பட்டுள்ளது. அதனால் இந்திய தேசியத்தைவிட சந்தையும் வர்த்தகமும் நிதி முதலீடும் தொழில் முதலீடும் முதன்மையானவையாக மாறியுள்ளன. இவையே இன்று இந்திய தேசத்தின் நலன்களாக மாறியுள்ளன. இலங்கைத் தீவு முழுமையாக சீனாவிடம் கைமாறினாலும் இந்திய ஆளும் தரப்பு அரசியல் மௌனத்தையே கடைப்பிடிக்கும். வேண்டுமாயின் வர்த்தக மற்றும் சந்தை வாய்ப்புக்கான நடவடிக்கைகளை இரு நாட்டுக்குமான உரையாடல் மூலம் பெற்றுக் கொள்ள விளையும். (நன்றி - அருவி)



# பெண்ணுக்கு ஆயுள் அதிகம்! பரிணாம வளர்ச்சியின் புதிய கோட்பாடு

சுசித்ரா

கொரோனா தாக்கி ஒட்சிசன் குழாய் வழியாகச் சுவாசித்தபடி அடுப்பங்கரையில் நின்று சமைத்துக் கொண்டிருக்கும் ஓர் இந்தியப் பெண். தாய்மையைப் போற்றும் வாசகத்தைத் தாங்கி இப்படியொரு பெண்ணின் புகைப்படம் அன்னையர் தினத்தன்று சமூக ஊடகங்களில் உலா வந்ததைப் பலரும் கண்டிருக்கக் கூடும்.

இந்தியாவில் கொரோனா தாக்கப்பட்டு 9 ஆண்கள் உயிரிழக்கும்போது 10 பெண்கள் இறக்கின்றனர் என்று அறியப்படுகிறது. இதற்குக் காரணம், இந்தியப் பெண்களின் உடல் ஆரோக்கியம் பொருட்படுத்தப்படுவதில்லை என்பதை சர்வதேச அங்கீகாரம் பெற்ற மருத்துவ ஆய்விதழான 'தி லான்செட்' சுட்டிக்காட்டுகிறது. உடல் உபாதைகள் ஏற்படும்போது உடனடியாக மருத்துவமனைக்கு அழைத்துச் செல்லப்படும் இந்தியப் பெண்களின் எண்ணிக்கை குறைவாக இருப்பதாக அந்த இதழ் கூறுகிறது.

கொரோனா வைரஸ் என்னவோ பாலின பேதமின்றி எல்லோர் மீதும் தான் தொற்றிக்கொள்கிறது. ஆனால், இந்தியா, நேபாளம், வியட்நாம், ஸ்லோவேனியா ஆகிய நாடுகளிலோ ஆண்களைக் காட்டிலும் பெண்களே அதிகமாக கொரோனாவால் உயிரிழந்து வருகின்றனர். இந்தியா உள்ளிட்ட நாடுகளில் பெண்களின் இறப்பு விகிதம் கூடுதலாக இருப்பதற்குக் காரணம், அவர்கள் உதாசீனப்படுத்தப்படுவதுதான்.

பெரும்பாலான உலக நாடுகளில் கொரோனாவுக்கு ஆண்களே அதிக எண்ணிக்கையில் பலியாகினர் என்று கண்டறியப்பட்டுள்ளது. ஐரோப்பிய நாடுகளில் நேர்ந்த கொரோனா மரணங்களில் 63வீத ஆண்கள் என்று உலக சுகாதார மையம் கடந்த ஆண்டு அறிக்கை வெளியிட்டது. சீனா எதிர்கொண்ட கொரோனா பலிகளில் 70வீத ஆண்கள் என்கின்றனர் சீன ஆராய்ச்சியாளர்கள்.

கொரோனா தொற்றினால் மட்டுமல்லாது 2003இல் பரவிய சார்ஸ் நோயினாலும் ஆண்களே அநேகமாக உயிரிழந்தனர். ரோம் உயர் மருத்துவ நிறுவனம் வெளியிட்ட அறிக்கையிலும் 5 பெண்களுக்கு 8 ஆண்கள் என்கிற விகிதாசாரத்தில் கொரோனா மரணங்கள் ஏற்படுவதாக வெளியிடப்பட்டது. நியூயோர்க் நகரத்தில் கொரோனா மரணங்களில் ஆண்-பெண் விகிதாசாரம் 13:10 என்ற அளவில் இருந்தது பதிவாகியிருக்கிறது.

### புதிய கண்டுபிடிப்பு!

இயற்கையாகவே ஆண்களைக் காட்டிலும் பெண்களுக்கு எதிர்ப்புசக்தி கூடுதலாக இருப்பதாக உயிரியல் அடிப்படையில் இது நிறுவப்படுகிறது. அதுமட்டுமின்றி புகைப்பழக்கம் உள்ளிட்ட நடத்தைக் கோளாறுகள் காரணமாக ஆண்களின் இறப்பு விகிதம் அதிகரிப்பதாகத் தெரியவருகிறது.

மாரடைப்பு, உயர் இரத்த அழுத்தம், கல்லீரல் வியா திகள் ஆகியவை ஆண்களை எளிதில் தாக்கும் போக்கும் மற்றொரு காரணம்.

இந்நிலையில், மனித இனத்தில் மட்டுமல்லாது அனைத்து உயிரினங்களிலும் ஆண் / பெண் விகிதாசாரத்தைமையப்படுத்திப் புதியதோர் ஆராய்ச்சி முடிவு தற்போது வெளிவந்துள்ளது. இங்கிலாந்தின் பாத் பல்கலைக்கழகத்தில் உள்ள 'தி மில்னர்' பரிணாம வளர்ச்சி மையத்துக்கு உட்பட்ட பல்லுயிர் துறைப் பேராசிரியர் தாமஸ் ஸெக்கிளி, பரிணாம வளர்ச்சிக் கோட்பாட்டில் புதியதொரு கண்டுபிடிப்பை நிகழ்த்தியுள்ளார். இதன் மூலம் பரிணாம வளர்ச்சிக் கோட்பாட்டுத் தந்தை டார்வின் சிந்தனைக்குப் புதிய வடிவம் கொடுத்து உலகைத் திரும்பிப் பார்க்க வைத்திருக்கிறார்.

### மயில் எழுப்பிய கேள்வி

டார்வின் முன்மொழிந்த கருத்தாக்கங்களில் அதிமுக்கியத்துவம் வாய்ந்தவை 'இயற்கைத் தேர்வு', 'பாலியல் தேர்வு'. எந்தக் கட்டத்திலும் உயிர் வாழ வேண்டி உயிரினங்கள் தகவமைத்துக் கொள்ள இயற்கை நிர்ப்பந்திக்கிறது. இதற்கு ஓர் உயிரினத்தின் நன்மை அளிக்கும் பண்புகள் மக்கள்தொகையில் பரவித் தழுவுவதே இயற்கைத் தேர்வு என்றார் டார்வின். கடவுள் மனிதனைப் படைத்தார் என்று இரண்டாயிரம் ஆண்டுகள் நம்பப்பட்டுவந்த போக்கை டார்வினின் இந்தச் சிந்தனை புரட்டிப்போட்டது. ஆயினும், டார்வினுக்குள் எழுந்த சில கேள்விகளுக்கு அதில் விடை கிடைக்கவில்லை. "மயில் தோகையின் வண்ணமயமான இறகுகளைக் காணும் போதெல்லாம் நான் எதையோ கண்டுபிடிக்கத் தவறிவிட்டேனோ எனச் சோர்ந்து போகிறேன்!" என்று தன் நண்பருக்குக் கடிதம் எழுதினாராம் டார்வின்.

பின்பு 1859இல், 'உயிரினங்களின் தோற்றம்' புத்தகத்தில் முதன்முதலில், 'பாலியல் தேர்வு' குறித்து எழுதினார். இதன்படி உயிர் பிழைத்திருக்க மட்டுமே உயிரினங்கள் எத்தனிக்கவில்லை. அடுத்த சந்ததியை உருவாக்க ஒரு பாலினம் எதிர் பாலினத்தில் சிறந்ததைத் தேர்ந்தெடுக்க முயல்கிறது. அது மட்டுமின்றி, தான் சிறந்தவன் என்பதை நிறுவ தன் பாலினத்துடன் போட்டி போடுகிறது.

தன்பாலினத்துடன் சரிசமமாகப் போட்டி போடக் கொம்புகள், கோரமான பற்கள், குளம்புகள், பெரிய உருவம் ஆகியவற்றைத் தற்காப்பு ஆயுதங்கள் போல விலங்குகள் கொண்டிருப்பதாக வும், தோகை, இறகுகள் ஆகியவற்றை எதிர் பாலினத்தை ஈர்க்கும் நோக்கில் இனக்கவர்ச்சிக்காகக் கொண்டி ருப்பதாகவும் டார்வின் நிறுவினார்.

### அதிக பெண்கள், அதிக போட்டி

இதில் குறிப்பாக ஆண்ஃ பெண் விகிதாசாரம் குறித்த டார்வினின் கூற்று கவனத்துக்குரியது. ஆண்களைக் காட்டிலும் பெண்களின் எண்ணிக்கை குறைவாக இருக்கும்போது தனக்கான இணையை ஈர்த்துத் தக்கவைத்துக் கொள்ள ஆண் இனம் பிரயத்தனப்படுவதே பாலியல் தேர்வின் அடிப்படை என்றார் டார்வின்.

டார்வினுடைய இந்தக் கருதுகோளுக்கு நேரெதிரான கோணத்தைப் புதிய ஆய்வு நிறுவியுள்ளது. இதில் பெண்களின் எண்ணிக்கை கூடு தலாக இருக்கும்பட்சத்தில் தான் பாலியல் தேர்வு தீவிர மாக நடைபெறுவதாகக் கூறப்பட்டுள்ளது. இதற்கு டார்வின் காலத்திலிருந்து சேகரிக்கப்பட்ட தரவுகள் புதிய ஆய்விலும் மேற்கோளா கக் காட்டப்பட்டுள்ளன. பட்டாம்பூச்சி முதல் பாலூட்டிகள் வரை எக்காலத்திலும் ஆண் இனத்தை விடவும் பெண் இனம் கூடுதல் எண்ணிக்கையில் இருந்ததற்கான சான்றுகள் காட்டப்பட்டுள்ளன.

ஆனால், பறவை இனங்களுக்கு இந்தக் கூற்று பொருந்தாது என்று சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. அதேபோல 462 விதமான ஊர்வன, பாலூட்டி, பறவை இனங்களை ஆராய்ந்து, பொதுவாகப் பெண்களை விடவும் ஆண்கள் உருவத்தில் பெரியதாக இருப்பதற்கான காரணத்தையும் விளக்கியுள்ளது. தன்னுடன் போட்டி போடும் ஆணை வீழ்த்திப் பெண்ணைக் கவரவே புஜபலமும் ஆகிருதியான தோற்றமும் ஆணுக்கு வாய்த்துள்ளதாம்.

> டார்வினுடைய இந்தக் கருதுகோளுக்கு நேரெதிரான கோணத்தைப் புதிய ஆய்வு நிறுவியுள்ளது. இதில் பெண்களின் எண்ணிக்கை கூடுதலாக இருக்கும்பட்சத்தில்தான் பாலியல் தேர்வு தீவிரமாக நடைபெறுவதாகக் கூறப்பட்டுள்ளது.

### பலம் வாய்ந்தவளே

பறவை இனத்தைத் தவிர, மற்ற உயிரினங்களில் பெண் இனமே அதிக எண்ணிக்கையில் நீடிக்கிறது. குறிப்பாக, பாலூட் டிகளில் பெண் இனத்தின் ஆயுட்காலம் தனது ஆண் இணையை விடவும் கூடுதலாக இருப்பதே இதற்கான மூல காரணம். அதிலும் மனிதர்களில் ஆண்களைக் காட்டிலும் பெண்களின் ஆயுட்காலம் சராசரியாக 5வீதம் அதிகம் என்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. ஆபிரிக்க சிங்கத்திலும் கில்லர் திமிங்கிலத்திலும் (killer whale) ஆணைக் காட்டிலும் பெண் இனத்துக்கு 50வீதம் ஆயுட்காலம் கூடுதலாம்.


இதன் நீட்சியாகவே, பெருந்தொற்றிலிருந்தும் உயிர்க்கொல்லி நோயிலிருந்தும் உயிர் தப்பிப் பிழைப்பவர்களில் பெண்களின் எண்ணிக்கை கூடுதலாக இருப்பதாக இந்த ஆய்வு வலியுறுத்துகிறது. மொத்தத்தில், இதுகாலம் வரை சொல்லப்பட்டு வந்த 'பெண் பலவீனமானவள்' என்கிற பொதுப்புத்தியைப் புரட்டிப்போடும் புதிய பார்வையாக இந்த ஆய்வு இருக்கிறது. ■

# புலமைச் சிகரம்


**ஆண்டு 5 புலமைப் பரிசில் மாணவர்களுக்கான வழிகாட்டி**

மாதிரிப் பரீட்சை - 8
வினாத்தாள் II
நேரம் - 45 நிமிடம்
ஆசிரியர் - மு.வே.அன்பழகன்


கல்வி tv CHANNEL

04. 
இவ் விளையாட்டு
1) ஓர் அணியில் 6 பேர் விளையாடுவர்
2) ஓர் அணியில் 11 பேர் விளையாடுவர்
3) ஓர் அணியில் 7 பேர் விளையாடுவர்
4) ஓர் அணியில் 12 பேர் விளையாடுவர்


05. பின்வருவனவற்றுள் வரண்ட பிரதேசத் தாவரம் எது?


1. 2. 3. 4.


06. நீருள்ள கண்ணாடிக்குவளையினுள் பென்சிலை இட்டு அவதானிக்கும் போது எவ்வாறு தோன்றும்?


1. 2. 3. 4.

07. கீழே தரப்பட்ட பெரியார்கள் எமது நாட்டிற்காக உழைத்தவர்களாவர். சேர்.டி.பி ஜயதிலக்க குறித்துக் காட்டும் உரு


1. 2. 3. 4.

08. பராக்கிரம சமுத்திரம் காணப்படும் இடம்
1. மிகிந்தலை 2. பொலன்னறுவை 3. அனுராதபுரம் 4. கொக்கிராவை

09. 
இந்த வித்துக்கள் முறையே எவ்வாறு பரவும்?

| | | | |
|---|---|---|---|
| 1) A காற்று | B வெடித்து | C பிராணி | D நீர் |
| 2) A வெடித்து | B பிராணி | C காற்று | D நீர் |
| 3) A காற்று | B நீர் | C வெடித்து | D பிராணி |
| 4) A வெடித்து | B காற்று | C நீர் | D பிராணி |

10. 
இந்த உபகரணத்தின் பயன்பாடு
1) சுரையை இறுக்குதல் 2) அறையப்பட்ட ஆணியைக் கழற்றுதல்
3) திருகாணியை இறுக்குதல் 4) பலகையில் துளையிடல்

11. ஒரு காந்தத் துண்டின் முனையை இன்னொரு காந்தத் துண்டின் முனைக்கு அருகே பிடிக்கும் போது நிகழக்கூடியதைச் சரியாகக் குறிப்பிடும் விடை
1. காந்தத் துண்டுகள் இரண்டும் ஒன்றையொன்று நிச்சயம் கவரும்
2. காந்தத் துண்டுகள் இரண்டும் ஒன்றையொன்று நிச்சயம் கவரும்
3. காந்தத் துண்டுகள் ஒன்றையொன்று கவரும் அல்லது தள்ளும்
4. எதுவும் நடைபெறாது

12. குற்றிய நெல்லில் இருந்து அரிசியை வேறாகவும் உமியை வேறாகவும் புடைத்துப் பிரித்தெடுக்க வீட்டில் பயன்படுத்தப்படும் உபகரணம்
1. மாவரி 2. அரிக்குஞ்சட்டி 3. பெரிய கோப்பை 4. சுளகு

13. இலங்கை அரச இலச்சினையில் சௌபாக்கியத்தைக் குறிப்பது
1. நிறைகலசம் 2. நெற்கதிர் 3. மலரிதழ் 4. சிங்கம்

14. ஆணிவேர் அற்ற தாவரம்
1. கித்துள் 2. பலா 3. புளி 4. வேம்பு

15. | N | S | N | S | இக்காந்தச் சட்டங்களுக்கு நிகழக்கூடியது
1. கிழக்குத் திசை நோக்கித் திரும்பும் 2. ஒன்றையொன்று கவரும்
3. மேற்குத் திசை நோக்கித் திரும்பும் 4. ஒன்றையொன்று தள்ளும்

16. கழிச்சல் நோய் பரவுவது
1. நுளம்பின் மூலம் 2. எலியின் மூலம் 3. ஈயின் மூலம் 4.கோழியின்மூலம்


17. அசுத்தமான நீரைக் குடிக்கும் போது ஏற்படாத நோய்
1. வாந்திபேதி 2. கயரோகம் 3. நெருப்புக்காய்ச்சல் 4.மஞ்சட்காமாலை

18. இலங்கையில் தேசியக் கொடியில் முஸ்லீம் மக்களைக் குறித்து நிற்பது
1. செம்மஞ்சள் நிறப் பகுதி 2. செந்நிறப் பகுதி
3. பச்சைநிறப் பகுதி 4. மஞ்சள் நிறப் பகுதி


19. மின்னேரியாவைக் கட்டுவித்த அரசன்
1. பண்டுகாபயன் 2. தாதுசேனன் 3. மகாசேனன் 4. மகா பராக்கிரமபாகு

20. உருவில் காணப்படுவது


1. யாப்பகூவாக் கோட்டை 2. சிவனொளிபாதமலை
3. சிகிரியா 4. தலதாமாளிகை

21. 
இந்த வேரையுடைய தாவரம் எது?
1. பப்பாசி 2. நெல்
3. பனை 4. தென்னை


22. தரப்பட்டுள்ள தாவரங்களில் தொட்டாற்சுருங்கி எது?


1. 2. 3. 4.

23. இலங்கையின் தேசிய விளையாட்டைக் காட்டும் உரு


1. 2. 3. 4.

24. நாம் செய்யக் கூடாத செயல் யாது?


1. 2. 3. 4.

25. 
தரப்பட்டுள்ள பறவையின் பெயர்
1. காகம் 2. குயில் 3. புறா 4. மைனா

# கொரோனா தொற்று சவாலை வெற்றிகரமாக முறியடிப்போம்

## பிரதமர் மஹிந்த சூளுரை



**கொழும்பு, ஜூலை 04**

**“கொரோனாத் தொற்றுப் பரவல் சவாலை ஒன்றிணைந்து வெற்றிகரமாக முறியடிப்போம். நாட்டின் அபிவிருத்தித் திட்டங்களை தடையின்றி தொடர்ச்சியாக முன்னெடுத்துச் செல்வோம்.” - இவ்வாறு பிரதமர் மஹிந்த ராஜபக்ச தெரிவித்தார்.**

தெற்கு அதிவேக வீதியின் கபுதுவ பிரதேசத்தின் நுழைவாயிலைத் திறந்து வைக்கும் நிகழ்வு நேற்றுமுன்தினம் அலரிமாளிகையில் இருந்து வீடியோ தொழில்நுட்பம் ஊடாக இடம் பெற்றது.

இதில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே பிரதமர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது: -

“அன்று பின்தங்கிய பிரதேசங்களாக ஒதுக்கப்பட்ட பலகிராமங்கள், நாட்டில்நெடுஞ்சாலைகள் ஏற்படுத்தப்பட்டதன் பின்னர் தற்போது முன்னேற்றமடைந்து வருகின்றன.

நாட்டு மக்கள் மருத்துவமனைகள் மற்றும் தமது தொழில்புரியும் இடங்களுக்கு குறித்த நெடுஞ்சாலைகள் மூலம் சென்று வருகின்றனர்.

இவ்வாறான அபிவிருத்தித் திட்டங்களை முன்னெடுக்கும்போது எதிர்க்கட்சியினர் பல குற்றச்சாட்டுக்களை முன்வைக்கின்றனர்.

ஒரு சிலர் கொரோனாத் தொற்று முடியும் வரை அபிவிருத்தித் திட்டங்களை மேற்கொள்ள வேண்டாம் எனவும் தெரிவித்தனர்.

இவ்வாறு சொல்பவர்கள் உண்மையாகவே சொல்கிறார்களா, இல்லையா என்பது தொடர்பில் மக்கள்தான் தீர்மானிக்க வேண்டும்.

கொரோனாவைக் காரணம் காட்டி ஒன்றையும் செய்யமுடியாதென்று கூறினால் அது நாட்டு மக்களுக்கு பெரும் அசௌகரியங்களை ஏற்படுத்தும்.

நாம் நாட்டு மக்களை முறையாகப் பாதுகாப்போம். அதற்காக ஒத்துழைப்புக்களை எதிர்பார்க்கிறோம். நாம் ஒன்றுபட்டால் முடியாதது எதுவும் இல்லை” - என்றார். (இ)



# மூன்று மாவட்டங்களில் 3 கிராமங்கள் முடக்கம்!

## நாயாறு மீன்பிடித்துறைப் பகுதியும் தனிமைப்படுத்தல்

கொழும்பு, ஜூலை 04

முல்லைத்தீவு, அம்பாறை மற்றும் கேகாலை ஆகிய மாவட்டங்களில் மூன்று கிராமங்கள் நேற்றுக் காலை 6 மணி முதல் தனிமைப்படுத்தப்பட்டுள்ளன என்று கொரோனாத் தடுப்புக்கான தேசிய செயற்பாட்டு மையத்தின் தலைவரும் இராணுவத் தளபதியுமான ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித்தார்.

இதன்படி முல்லைத்தீவு மாவட்டத்தில் நாயாறு பொலிஸ் பிரிவுக்குட்பட்ட செம்மலை கிழக்கு கிராம சேவகர் பிரிவில் நாயாறு மீன்பிடித் துறை பகுதியும், கேகாலை மாவட்டத்தில் மிஹிபிட்டி கிராம சேவகர் பிரிவில் மாதெய்யாவ கிராமமும் தனிமைப்படுத்தப்பட்டுள்ளன.

அத்துடன், அம்பாறை மாவட்டத்தில் கல்முனை பொலிஸ் பிரிவில் மருதமுனை - 3 கிராம சேவகர் பிரிவும் முடக்கப்பட்டுள்ளது. (இ)

# சஜித் - கரு அவசர சந்திப்பு

## சமகால நிலைவரம் குறித்தும் ஆராய்வு

கொழும்பு, ஜூலை 04

எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவுக்கும், முன்னாள் சபாநாயகர் கருஜயசூரியவுக்கும் இடையில் முக்கிய சந்திப்பு இடம்பெற்றுள்ளது.

கடந்த 30ஆம் திகதி இரவு நடைபெற்றுள்ள இந்தச் சந்திப்பில் சமகால அரசியல் நிலைவரம் தொடர்பிலும், அடுத்தகட்ட நகர்வுகள் சம்பந்தமாகவும் பிரிவாக கலந்துரையாடப்பட்டுள்ளன என்று கொழும்பு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.



நியாயமான சமூகத்துக்கான தேசிய இயக்கத்தின் தலைவராகத் தற்போது செயற்படும் கரு ஜயசூரிய, சிவில் செயற்பாட்டு பணிகளில் ஈடுபட்டு வருகின்றார்.

அதேவேளை, ரணில் மற்றும் சஜித் தரப்புகளை இணைப்பதற்கான முயற்சியாகக்கூட இந்தச் சந்திப்பு இருந்திருக்கலாம் என ஊகம் வெளியிடப்படுகின்றது. (இ)



# ஜனாதிபதியை அவசரமாக சந்திக்கிறது சுதந்திரக் கட்சி

கொழும்பு, ஜூலை 04

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்சவுக்கும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் சிரேஷ்ட உறுப்பினர்களுக்கும் இடையிலான சந்திப்பு விரைவில் நடைபெறவுள்ளது.

நாட்டில் தற்போது நிலவும் அரசியல் மற்றும் சமூகம்சார் பிரச்னைகள் தொடர்பில் கலந்துரை யாடுவதற்கே சந்திப்புக்கு திகதி கோரப்பட்டுள்ளது என சு.கவின் பொதுச் செயலாளர் தயாசிறி ஜயசேகர எம்.பி. தெரிவித்தார்.

அரசின் பங்காளிக் கட்சியாக இருக்கும் சுதந்திரக் கட்சி, ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியின் செயற்பாடுகளை அண்மைக்காலமாக கடுமையாக விமர்சித்து வருகின்றது. விரைவில் அமைச்சரவை மறுசீரமைப்பும் இடம் பெறவுள்ளது. இவ்வாறானதொரு பின்புலத்திலேயே சு.க.வினர், ஜனாதிபதியை அவசரமாகச் சந்திக்கின்றனர்.

ஜனாதிபதியுடன் அரசியல் பிரச்னை, உரப்பிரச்னை, வெளிவிவகாரக் கொள்கை மற்றும் வாழ்க்கைச் செலவு உள்ளிட்ட விடயங்கள் தொடர்பில் கலந்துரையாடுவதற்கு எதிர்ப்பார்க்கின்றோம் எனவும் தயாசிறி ஜயசேகர எம்.பி. மேலும் கூறினார். (இ)

# பஸில் வந்தால் கப்பலுக்கு நேர்ந்த கதியே நாட்டின் பொருளாதாரத்துக்கும் ஏற்படும்

## சம்பிக்க எம்.பி. கருத்து

கொழும்பு, ஜூலை 04

“பஸில் ராஜபக்ச பொருளாதார விவகார அமைச்சராகப் பதவியேற்றால், ‘எக்ஸ் - பிரஸ் பேர்ல்’ கப்பலுக்கு நேர்ந்த கதியே இலங்கையின் பொருளாதாரத்துக்கும் ஏற்படும்.”

- இவ்வாறு ஐக்கிய மக்கள் சக்தியின் கொழும்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சம்பிக்க ரணவக்க தெரிவித்தார்.

பஸில் ராஜபக்ச மீண்டும் பாராளுமன்ற அரசியல் பயணத்தை ஆரம்பிக்கவுள்ளமை தொடர்பில் கருத்து வெளியிடுகையிலேயே அவர் மேற்கண்டவாறு சுட்டிக்காட்டினார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது: -

“சேற்றுக்குழிக்குள் விழுந்தவர்கள் துள்ளக்கூடாது. அவ்வாறு துள்ளினால் முழுமையாக சேற்றில் மூழ்கவேண்டிய நிலையே ஏற்படும். இலங்கை கடற்பரப்புக்குள் வைத்து “எக்ஸ் - பிரஸ் பேர்ல்“ கப்பல் தீப்பிடித்து அனர்த்தத்துக்குள்ளானபோது, கப்பற்றுறை அமைச்சரும், துறைமுக அதிகார சபையினரும் கதையளந்தனர். இறுதிக்கட்டத்தில்தான் கப்பலை இழுக்க முற்பட்டனர். அப்போது என்ன நடந்தது? கப்பல் உடைந்து கடலுக்குள் மூழ்கியது.



பஸில் ராஜபக்ச என்பவரும் அவ்வாறுதான். இலங்கை எனும் கப்பலும், பொருளாதாரமும் தீப்பிடித்து எரிந்துள்ளது. எனவே, இவற்றை இழுப்பதற்கான பொறுப்பை பஸிலிடம் கொடுத்தால் இவையும் மூழ்கி விடும். கடைசியில் கப்பலுக்கு நேர்ந்த கதிதான் எமது நாட்டுக்கும் நேரும்” - என்றார். (இ)





# ஜெயலலிதா சமாதியில் சசிகலா மீண்டும் சபதம்...?

## சசிகலா இல்லம் வந்த காவி தூதர்!

## சீமான் உள்பட, ஸ்டாலின் விசிறிகளாகும் தி.மு.க. எதிர்ப்பாளர்கள்





**- பகவான் சிங் - தமிழகத்தின் சிரேஷ்ட பத்திரிகையாளர்**

சென்ற வாரம், பிராமணர், வடக்கு மாநிலங்களைச் சேர்ந்தவர்கள், அவர்களின் ஹிந்தி மொழி ஆகியவற்றின்மீதான திராவிட அரசியலின் எதிர்ப்பு மற்றும் வெறுப்பு மனநிலை பற்றி என் கருத்துக்களைப் பகிர்ந்துகொள்வதாக வாசகர்களிடம் சொல்லியிருந்தேன். ஆனால், தமிழ்நாட்டில் நடந்த சில சமீபத்திய நிகழ்வுகள் மிகப்பெரிய உற்சாகத்தையும் சலசலப்பையும் ஏற்படுத்தியிருக்கின்றன. அவை சமீப காலத்திய போக்குகளுக்கும் பொருந்திப்போகின்றன என்பதால், பிராமணர்கள்-கடவுள் பற்றிய விவாதங்களை மற்றொரு நேரத்துக்கு ஒத்திவைத்துவிட்டு, இந்த முக்கிய நிகழ்வுகளைப் பற்றிப் பேசியாகவேண்டியதாகி விட்டது.

பூஷணி கல்யாணராமன் என்கிற பிரபலமான கர்நாடக இசைக்கலைஞரின் சென்னை இல்லத்தில் இந்த புதன்கிழமை மதியம் என்னுடைய இந்த மன மாற்றத்துக்கு வித்து விழுந்தது..பூஷணி யாழ்ப்பாணத்தின் வேலணையைச் சேர்ந்தவர். தெற்காசிய நிகழ்த்துகலைக்கான சர்வதேச மேடையைத் துவக்கி வைப்பதற்கான சில யோசனைகளைப் பற்றிப் பேசுவதற்காக இவர் தனது இசைத்துறை நண்பர்களை மதிய விருந்துக்கு அழைத்திருந்தார். காப்பி நேரத்தில் தந்தி ரிவியில் ஓடிய ஒரு செய்திக்கோவை அனைவரின் கவனத்தையும் கவர்ந்திருக்கிறது. சென்னையிலிருந்து மேற்கே சுமார் 40 கிலோமீட்டர் தொலைவில் உள்ள ஸ்ரீபெரும்புதூரில் ஹூண்டாய் கார் தொழிற்சாலையின் வெள்ளிவிழா நிகழ்ச்சியில் முதலமைச்சர் மு. க. ஸ்டாலின் பேசிக் கொண்டிருந்தார். 1998 ஆம் ஆண்டில் தொழிற்சாலை தொடங்கப்பட்டதிலிருந்து இன்றுவரை அங்கு ஒரு கோடி கார்கள் உற்பத்தி செய்யப்பட்டிருக்கின்றன. தென்கொரியாவைச் சேர்ந்த ஹூண்டாய் நிறுவனம் அந்த நிகழ்வை விமரிசையாகக் கொண்டாடிக்கொண்டிருந்தது. 1996இல் தன்னுடைய தந்தை மு. கருணாநிதி மீண்டும் பதவிக்கு வந்த பின்பு எவ்வாறு தொழில் முன்னேற்றத்துக்கு வித்திட்டார் என்பதையும், அதன் ஒரு பகுதியாகவே இந்த தொழிற்சாலை தொடங்கப்பட்டது என்பதையும் முதல்வர் நினைவுகூர்ந்தார். தன் தந்தையின் கரங்களால் தொழிற்சாலையின் இரண்டாம் வளாகத்துக்கான அடிக்கல் நாட்டப்பட்டதையும், 2011இல் தான் துணை முதல்வராக இருந்தபோது, கிராமப்புறத்திலிருந்து பயிற்சிக்காக வரும் இளைஞர்களுக்கான ஒரு விடுதியைத் துவக்கி வைத்ததையும் குறிப்பிட்டுப் பேசினார்.
இந்தியாவின் இரண்டாவது பெரிய கார் தொழிற்சாலையாகவும் கார் ஏற்றுமதியில் முதல் நிறுவனமாகவும் இருக்கும் ஹூண்டாய்க்குப் புகழாரம் சூட்டிய ஸ்டாலின், தொழில் வளர்ச்சிக்கு மத்தியில் சமூகத்துக்காகவும் ஹூண்டாய் யோசிக்கிறது என்பதற்கு முதலமைச்சர் கொரோனா நிவாரண நிதிக்கு அவர்கள் அளித்த மூன்று கோடி ரூபாய் நிதியே சாட்சி என்றார். மற்ற சர்வதேச நிறுவனங்கள் தமிழ்நாட்டை நோக்கி வருவதற்கு இது ஓர் உத்வேகமான முன்னுதாரணம் என்றும் குறிப்பிட்டார்.

"நம்முடைய அரசு, தமிழ்நாட்டை தெற்கு ஆசியாவிலேயே முதலீடுகளுக்கு மிகவும் உகந்த மாநிலமாக மாற்ற வேண்டுமென்ற நோக்கத்தைக் கொண்டிருக்கிறது என்பதை இந்த நிகழ்ச்சியின் வாயிலாக அனைத்து தொழில் நிறுவனங்களுக்கும், தொழில் அதிபர்களுக்கும் நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். அதற்கான அடிப்படைத் திட்டமிடுதலை நாங்கள் தொடங்கியிருக்கிறோம். உலகப் புகழ்பெற்ற பொருளாதார அறிஞர்களைக் கொண்ட ஆலோசனைக்குழுவை அமைத்திருக்கிறோம். இது, தொழில் நிறுவனங்களுக்கு மாபெரும் நம்பிக்கையை ஏற்படுத்தியிருக்கிறது. தமிழ்நாட்டின் மீது உலக ஊடகங்களின் கவனம் குவிய, இந்த அறிவிப்பு அடித்தளம் இட்டிருக்கிறது. இந்தக் குழு அனைத்து பொருளாதார மேதைகளாலும் பாராட்டப்பட்டுக் கொண்டிருக்கிறது. இந்தக் குழுவின் ஆலோசனையைப் பெற்று தமிழ்நாடு அரசு நிச்சயமாக செயல்படும். திட்டங்களை வகுப்பதற்காகவும் ஒரு குழு அமைக்கப்பட்டிருக்கிறது. இப்படி பல்வேறு முடிவுகளை ஆய்வுகள் செய்து அனைத்து வகையான மேம்பாடுகளையும் நோக்கிச் செல்ல தமிழ்நாடு அரசு உறுதி கொண்டிருக்கிறது" என்று தெரிவித்தார்.

தமிழ்நாட்டின் தொழில் மற்றும் பொருளாதார வளர்ச்சிக்கான இலக்குகளைக் குறிப்பிட்டுப் பேசும் போது, தீர்க்கமாக ஒரு அறைகூவலை வெளியிட்டார் : "முதலீடுகளை அதிகம் பெற முதலில் தேவையானது நிதியல்ல, நம்பிக்கைதான். அதுதான் முதல் முதலீடு. அந்த நம்பிக்கை கொண்ட அரசாக தமிழ்நாடு அரசு அடையாளம் காணப்படுவதைப் பார்க்கும்போது, எனக்கு உள்ளபடியே பெருமையாக இருக்கிறது. நாங்கள் ஆட்சிக்கு வந்து இன்னும் இரண்டு மாதங்கள்கூட ஆகவில்லை, அதற்குள் இப்படிப்பட்ட நம்பிக்கையை நாங்கள் பெற்றிருக்கிறோம்".

தொலைக்காட்சியைப் பார்த்துக்கொண்டிருந்த முதிய பெண்மணி ஒருவர் விழிவிரியக் கேட்டார் : "அவரு நல்லாதான் செயல்படுறார், இல்லையா?". பெரும்பாலும் பிராமணர்கள் நிறைந்த அந்த அறையிலிருப்பவர்கள் பலரும் ஆமோதித்தனர். நான் சிரிப்பை அடக்கிக் கொண்டேன். கிட்டத்தட்ட எல்லோருக்கும் ஜெயலலிதாவைப் பிடிக்கும், ஆகவே, அவர்கள் கருணாநிதியை வெறுத்தவர்கள். இது, எனக்குத் தனிப்பட்ட முறையிலேயே தெரியும். இப்போதோ, பதவிக்கு வந்த இரண்டு மாதங்களுக்குள் கருணாநிதியின் மகன் அவர்களிடமிருந்தே புகழாரம் பெற்றுக்கொண்டிருக்கிறார்.

இன்னொரு பட்டு மாமி சொன்னார் - "இதே மாதிரி தொடர்ந்து நல்லா மாநிலத்தை நிர்வாகம் பண்ணினா 2026 எலெக்ஷன்லயும் ஸ்டாலின்தான் முதல்வர், திமுக தொடர்ந்து ஆளும். இந்த பக்கம் பார்த்தா, கட்சிப்பூசல்களாலும் சசிகலா என்ற பூகம்பத்தினாலும் அ.தி.மு.க. கட்சி சிதைஞ்சிடும் போல".

இரண்டே மாதங்களில் தி.மு.க. வெறுப்பாளர்கள் ஸ்டாலினைப் பாராட்டி ரசிப்பது தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில் பெரிய விஷயம் தான். அவர் என்ன செய்கிறார் என்பதைத் தொடர்ந்து பார்த்து, அவர் தந்த வாக்குறுதிகளை அவர் தலைமையிலான அரசு நிறைவேற்றும்பட்சத்தில், இந்த நேர்மறையான எண்ணம் இன்னும் வலுவாகும் என்றே நம்புகிறேன்.

மீண்டும் அவரது ஹூண்டாய் உரைக்குத் திரும்புவோம் - "தொழிற்துறையில் தொழில்நுட்ப மேம்பாட்டினை உறுதிப்படுத்த வேண்டும், பன்முகத் தொழில் வளர்ச்சியை உருவாக்க வேண்டும், புதிய தொழிற்சாலைகளை ஏராளமாக உருவாக்க வேண்டும், ஏற்கனவே இருக்கக்கூடிய தொழிற்சாலைகளை விரிவுபடுத்த வேண்டும், ஒரே இடத்தில் தொழில்கள் குவிந்துவிடக்கூடாது, அனைத்து மாவட்டங்களிலும் தொழிற்சாலைகள் பரவலாக அமைக்கப்படவேண்டும். அப்படி அமைக்கப்படும் தொழிற்சாலைகளில் அந்தந்த பகுதியைச் சார்ந்தவர்கள், தமிழ்நாட்டு இளைஞர்கள் பெருவாரியான வேலைவாய்ப்பைப் பெறவேண்டும். தமிழ்நாட்டை நோக்கி தொழிற்சாலைகள் முதலீடு செய்ய முன்வரும் சூழல் உருவாக்கப்பட வேண்டும். தொழில் தொடங்க சாதகமான பகுதியாக அனைத்து மாவட்டங்களையும், நகரங்களையும் மாற்ற வேண்டும் என்கிற அந்த இலக்குகளோடு அரசு செயல்படத் தொடங்கியிருக்கிறது. அந்த இலக்கை நிச்சயமாக விரைவில் அடைவோம்".

எதிர்க்கட்சிகளைச் சேர்ந்த எதிர்ப்பாளர்கள்கூட, புகழ்மிக்க தனது தந்தையை மிஞ்சுவதற்கான உறுதியுடன் ஸ்டாலின் செயல்படுகிறார் என்று என்னிடம் கூறுகிறார்கள். புலனாய்வுப் பத்திரிக்கையாளரும் வலைப்பூ எழுத்தாளருமான சவுக்கு சங்கர் ஒரு சுவாரஸ்யமான கோணத்தை எடுத்துவைக்கிறார். "ஸ்டாலினையும் அவரது நிர்வாகத்தையும் பல முன்னாள் அ.தி.மு.க. அமைச்சர்கள் இப்பொழுது பாராட்டி வருகிறார்கள். ஜெயலலிதா இருந்திருந்தால் இது நடந்திருக்காது. சென்ற அதிமுக ஆட்சியில் நடந்த ஊழல் முறைகேடுகளுக்காக வழக்குகள் தொடரப்படுமா என்ற பயம்தான் ஸ்டாலின் மீதான அன்பாக மாறியிருக்கிறது" என்கிறார். அ.தி.மு.க. தலைவர்கள் மட்டுமல்லாமல், தீவிர தி.மு.க. எதிர்ப்பாளரான சீமான் உட்பட பலரும் ஸ்டாலினின் விசிறிகளாக மாறியிருக்கிறார்கள்.

ஆகவே ஸ்டாலினுக்கு இப்போது அரசியலில் எதிர்ப்பு இல்லை. எதிர்க்கட்சித் தலைவர் பதவிக்காக ஒரு மாதம் ஓ. பி. எஸ்ஸுடன் சண்டையிட்டதில் எடப்பாடி பழனிச்சாமி ஏற்கனவே சோர்ந்து போயிருக்கிறார். தன் மகன் ரவீந்திரநாத்துக்கு மோடி அரசாங்கத்தில் கபினட் அமைச்சர் பதவி வாங்கிவிடவேண்டும் என்ற முனைப்பு ஓ. பி. எஸ்ஸைக் கட்டிப் போடுகிறது. இதனால், அரசியலைப் பொறுத்தவரை ஸ்டாலினுக்கு சாதகமான சூழலே நிலவுகிறது. அமைதியான சூழலில் வாக்குறுதிகளை நிறைவேற்றி, தமிழ்நாட்டை முன்னேற்றப் பாதையில் அவரால் எடுத்துச் செல்ல முடியும்.

அதிமுகவின் தோல்வியால் ஏற்கனவே துவண்டிருக்கும் எடப்பாடி பழனிச்சாமிக்கு சசிகலா நடராஜனின் ஓடியோக்களின் கொட்டும் மழை, கடும் நெருக்கடியை ஏற்படுத்திக்கொண்டிருக்கின்றது. ஜூலை 2ஆம் திகதி மட்டுமே அவர் ஏழு ஓடியோக்கள் வெளியிட்டிருக்கிறார்.

(14 ஆம் பக்கம் பார்க்க)






**வான்கூவரில் இருந்து 260 கிலோ மீற்றர்கள் வடகிழக்கே அமைந்துள்ள சிறிய கிராமம் லிட்டன் அங்கு அடுத்தடுத்து சிலநாட்களில் வெப்பநிலை உயர்ந்து உலக சாதனை அளவை எட்டியுள்ளது. கடந்த செவ்வாயன்று அங்கு 49.6C (121.3F) வெப்ப நிலை பதிவானது என்ற செய்தி வெளியான போது முழு உலகமும் லிட்டனை நோக்கித் திரும்பியது. சமீபகால வரலாற்றில் கனடா வில் மட்டுமன்றி உலக அளவிலும் மக்கள் வாழ்விடப் பகுதி ஒன்றில் பதிவாகிய அதி உச்ச வெப்ப நிலை இதுவே என்று கூறப்படு கிறது.**

# நெருப்பெடுக்கிறது இயற்கை! கருகுகின்றது கனடா கிராமம்!!

குமாரதாஸன்

காலநிலைப் பாதிப்புகள் மனித குலத்தை எதிர்காலத்தில் தான் தாக்கும் என்றிருந்த நம்பிக்கை தொலைந்து விட்டது. இயற்கை தன்னைச் சீண்டுகின்ற மனிதனை நிகழ்காலத்திலேயே பல வடிவங்களில் திருப்பித் தாக்கத்தொடங் கிவிட்டது.

அமெரிக்காவில் அடுக்குமாடி குடியிருப்பு ஒன்று இடிந்து தரைமட்டமாகிமையும் கனடாவின் பிரிட்டிஷ் கொலம்பியாவில் வான்கூவர் அருகே ஒரு கிராமம் நெருப்பு வெக்கையில் வெந்து கொண்டிருப்பதும் பூமி வெப்பமடைதலின் உடனடி விளைவுகள் என்கின்றனர் ஆய்வாளர்கள்.

வான்கூவரில் (Vancouver) இருந்து 260 கிலோ மீற்றர்கள் வடகிழக்கே அமைந்துள்ள சிறிய கிராமம் லிட்டன் (Lytton). அங்கு அடுத்தடுத்து சிலநாட்களில் வெப்பநிலை உயர்ந்து உலக சாதனை அளவை எட்டியுள்ளது. கடந்த செவ்வாயன்று அங்கு 49.6C (121.3F) வெப்பநிலை பதிவானது என்ற செய்தி வெளியான போது முழு உலகமும் லிட்டனை நோக்கித் திரும்பியது. சமீபகால வரலாற்றில் கனடாவில் மட்டுமன்றி உலக அளவிலும் மக்கள் வாழ்விடப் பகுதி ஒன்றில் பதிவாகிய அதி உச்ச வெப்ப நிலை இதுவே என்று கூறப்படுகிறது.

லிட்டன் பகுதியில் கடந்த சில தினங்களில் பதிவான மரணங்கள் 185 என்ற வழமையான கணக்கில் இருந்து 486 ஆக அதிகரித் துள்ளன. காற்றோட்ட வசதி இல்லாத வீடுகளில் படுக் கைக்குச் சென்ற பல முதி யோர்கள் மறுநாள் எழுந் திருக்கவில்லை. நெருப்பு மூழும் அளவுக்கு வெப்பம் தகிப்பதால் நகரை விட்டு வெளியேறுமாறு மக்கள் கேட்கப்பட்டுள்ளனர். பல பகுதிகளிலும் தீ பரவியுள்ளது. “முழு நகரமுமே நெருப்பில் உள்ளது” ("The whole town is on fire.") என்று லிட்டன் நகர மேயர் ஜான் போல்டர்மேன் (Jan Polderman) அதிர்ச்சியுடன் விவரித்திருக்கிறார்.

உச்ச வெம்மை தீயாக மூண்டு லிட்டன் கிராமத்தின் 90 வீதமான பகுதிகளைப் பொசுக்கிய விட்டதாக பிந்திய செய்திகள் தெரிவிக்கின்றன. அமெரிக்காவிலும் கனடாவின் பல பகுதிகளிலும் திடீரென வெப்பம் உயர்ந்துவந்த போதிலும் பிரிட்டிஷ் கொலம்பியாவையே அது மோசமாகத் தாக்கி உள்ளது. வசந்தத்துக்கும் கோடைக்கும் இடையே இதமான பருவ நிலையை அனுபவிக்கவேண்டிய கனடா மக்கள் உறங்க முடியாத இரவுகளைக் கழித்துக் கொண்டிருக்கின்றனர்.

பிரிட்டிஷ் கொலம்பியா (British Columbia) மாகாணத்தின் பெரிய நகரமான வான்கூவரில் பொது மக்கள் தங்குவதற்காக 25 குளிரூட்டப்பட்ட பாரிய நிலையங்கள் (air-conditioned cooling centres) திறக்கப்பட்டிருக்கின்றன.



**வெப்பக் குவிமாடங்கள்**

சமீப காலங்களில் உருவாகி வருகின்ற இதுபோன்ற புதிய வடிவங்களிலான இயற்கை அனர்த்தத்தை அறிவியலாளர்கள் "heat domes" என்று பெயர் குறிப்பிட்டு அழைக்கின்றனர். பூமியின் வெப்ப அதிகரிப்பு தரைப்பகுதிகளை உலர்த்தி வருகிறது. வரண்ட தரை வெப்ப நிலையைப் பெருக்குகின்றது. தரையிலும் சமுத்திரத்திலும் இவ்வாறு வெப்பம் பெருகி அதனால் உருவாகின்ற வெம்மையான காற்றலை வானில் ஒரு தொப்பி போன்ற அமைப்பில் ”வெப்பக் குவி மாடத்தை” (heat dome) தோற்றுவிக்கின்றது.

அமெரிக்கா - கனடாவை உள்ளடக்கிய வடமேற்கு பசுபிக்கில் (Pacific Northwest) தற்சமயம் உருவாகியுள்ள இத்தகைய ஒரு “வெப்பக் குவிமாடமே” பல மில்லி யன் மக்களைப் பாதித்துள்ள அனல் அதிகரிப்புக்குக் காரணம் ஆகும்- என்று வானிலை விஞ்ஞானிகள் கூறியுள்ளனர் அமெரிக்கா கண்டத்தில் மட்டுமன்றி ஆசியா, ஐரோப்பாப் பகுதிகளிலும் “வெப்பக் குவிமாடம்” தோன்றலாம். இது ஒரு புதிய வடிவ அனர்த்தம் என்றும் அவர்கள் விளக்க மளித்துள்ளனர்.

பூமி வெப்பம் அடைதலைத் தடுக்கின்ற உலக நடவடிக்கைகள் ஆமை வேகத்தில் தானும் நகர்ந்தபாடில்லை. ஆனால் அதன் விளைவுகள் பெரும் அழிவுகளாக மனிதனை மிக அருகில் நெருங்கி விட்டன. அமெரிக்காவின் புளோரிடாவில் குடியிருப்புக் கட்டடம் ஒன்று இடிந்து வீழ்ந்த பெரும் அனர்த்தத்துக்கான மூல காரணத்தை அறிவதில் தொழில்நுட்ப நிபுணர்கள் தீவிரமாக ஈடுபட்டுவருகின்றனர். அமெரிக்கா போன்ற நாடுகளில் கட்டடங்கள் இடிந்து விழும் சம்ப வங்கள் மிக அரிதாகவே நடக்கின்றன.

பருவ நிலை மாற்றம், கடல்நீர் மட்டம் உயர்தல், பலமான சூறாவளிகள் போன்ற இயற்கைக் காரணிகளும் கட்டடம் தகர்ந்ததற்குக் காரணமாக இருக்கக் கூடும் என்ற கோணத்திலும் அறிவிய லாளர்கள் சில சந்தேகங்களை முன்வைக்கின்றனர். மியாமி கரையோர த்தில் கடல்நீர் மட்டம் உயர்ந்து வருகிறது.

தரையின் மேலும் கீழும் அடர்த்தியான உப்பு நீர் அதிகரிப்பது கட்டடத்தின் அடித்தளத்தையும் உள் ஆதரவுக் கட்டமைப்புகளையும் பலவீனப்படுத்துவதில் குறிப்பிடத்தக்களவு பங்கு வகித்திருக்கக் கூடும் என்று ஆய்வாளர்கள் நம்புகின்றனர். அது உண்மையானால் கடல் நீர்மட்டம் அதிகரிப்பது உலகெங்கும் கடற்கரையோர நகரங்களின் அத்தி வாரங்களை ஆட்டங்காணச் செய்யலாம்.

# நாட்டில் வெவ்வேறு விபத்துக்களால் நாளாந்தம் பத்தாயிரம் பேர் பாதிப்பு

## 35 இற்கும் மேற்பட்டோர் மரணம் வெளியானது அதிர்ச்சித் தகவல்



**கொழும்பு, ஜுலை 04**

**வெவ்வேறு விபத்துக்கள் காரணமாக நாளாந்தம் 10 ஆயிரம் பேர் பாதிக்கப்படுகின்றனர் என்று சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.**

**இதன் காரணமாக தினமும் 35 இற்கும் மேற்பட்டவர்கள் மரணிக்கின்றனர் என்று தொற்றாநோய் பிரிவின் விசேட வைத்தியர் சமித சிறிதுங்க தெரிவித்துள்ளார்.**

மருத்துவ அறிக்கைக்கு அமைவாக, விபத்துக்கள் காரணமாக வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டவர்களின் எண்ணிக்கை 13 இலட்சம் வரை அதிகரித்துள்ளது என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்நிலையில், தேசிய விபத்துக்களைத் தடுப்பதற்கான வாரம் நாளை 5ஆம் திகதி முதல் 9 ஆம் திகதி வரை அனுஷ்டிகப்படவுள்ளது.

குறித்த வாரத்தில் விபத்துகளைத் தடுப்பது தொடர்பில் பொதுமக்களை விழிப்புணர்வூட்டும் வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்படவுள்ளன என்றும் அவர் மேலும் கூறினார்.(இ)

## திருமண நிகழ்வில் பங்கேற்ற சகலரும் தனிமைப்படுத்தலில்

கொழும்பு, ஜுலை 04

புத்தளம், முள்ளிபுரம் வேட்டால பிரதேசத்தில், தனிமைப்படுத்தல் சட்டவிதிமுறைகளை மீறி திருமண நிகழ்வில் பங்கேற்ற பலர் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர் என்று புத்தளம் பொதுச் சுகாதார பரிசோதகர்கள் காரியாலயம் தெரிவித்துள்ளது.

மணமகன், மணமகள் உள்ளிட்ட பலரே தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர்.

திருமண நிகழ்வு நேற்று முன்தினம் இடம்பெற்றுள்ளது. குறித்த நிகழ்வில் 200 இற்கும் மேற்பட்டோர் பங்கேற்றுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

அத்துடன் திருமணம் முடிந்ததன் பின்னர் வீடொன்றில் விருந்துபசாரம் இடம்பெற்றுள்ளது. இந்த விருந்துபசாரத்தில் 50 இற்கும் மேற்பட்டோர் பங்கேற்றுள்ளனர் என்றும் பொதுச் சுகாதார பரிசோதகர்கள் தெரிவித்துள்ளனர். (இ)

## 2 நகைக் கடைகள் தனிமைப்படுத்தல்

யாழ்ப்பாணம், ஜுலை 04

யாழ்ப்பாணம் மாநகரில் இரண்டு நகைக் கடைகள் சுகாதாரத்துறையினரால் தனிமைப்படுத்தப்பட்டுள்ளன.

யாழ்ப்பாணம் மின்சார நிலைய வீதியில் உள்ள இரண்டு நகைக் கடைகளே நேற்றுமுன்தினம் முதல் மறுஅறிவித்தல் வரை தனிமைப்படுத்தப்பட்டுள்ளன.

இரண்டு நகைக் கடைகளிலும் பணியாற்றுபவர்களுக்குக் கொரோனா வைரஸ் தொற்றுள்ளமை கண்டறியப்பட்ட நிலையில் யாழ்ப்பாணம் மாநகர சுகாதார மருத்துவ அதிகாரியின் அறிவுறுத்தலில் தனிமைப்படுத்தப்பட்டுள்ளன. (இ-3)

## ஜெயலலிதா சமாதியில்....

(12 ஆம் பக்கத் தொடர்ச்சி)

பெரும்பாலும் தன் முக்குலத்தோர் சமூகத்தைச் சேர்ந்த கட்சித் தொண்டர்களுடன் நிகழ்த்திய தொலைபேசி உரையாடல்களை அவர் வெளியிட்டுவருகிறார். எடப்பாடிமீது கொந்தளிக்கும் இவர்கள், சசிகலா மீண்டும் அரசியலுக்கு வரவேண்டும் என்று கெஞ்சுகிறார்கள். தானும் அம்மாவும் துன்பங்களையும் இன்னல்களையும் தாங்கி வளர்த்த கட்சி, இப்போது எடப்பாடி - ஓபிஎஸ் சண்டையால் சிதறிப்போயிருக்கிறது என சசிகலா கூறுகிறார். ஜுலை ஐந்தாம் திகதி கோவிட் ஊரடங்கு தளர்த்தப்படும் என்று எதிர்பார்க்கப்படுவதால் அன்று வெளியில் வந்து அம்மாவின் நினைவிடத்திலிருந்து கட்சியை சரியான பாதையில் அழைத்துச் செல்ல தன் யுத்தத்தைத் தொடங்க இருப்பதாகவும் தெரிவிக்கிறார். எம்.ஜி.ஆர் கூட தன் ஆலோசனைகளைக் கேட்பார் என்று அந்த ஒடியோக்களில் கூறியிருக்கிறார். பார்வையாளர்கள் அபூர்வமான அறிவாளர்களாக இருந்தால் இதுபோன்ற கொமெடி வசனத்துக்குக்கூட விசில் பறப்பது இயல்புதான்.

ஆகமொத்தம், வரும் நாட்களில் தமிழக அரசியலில் சுவாரஸ்யத்துக்குப் பஞ்சமிருக்காது. பெப்ரவரி 2017இல் சிறைவாசத்துக்கு முன்பாக ஜெ. சமாதியில் தரையில் கையால் அறைந்து சபதம் செய்ததுபோல, இப்போதும் சின்னம்மா செய்யக்கூடும். பிறகு, எடப்பாடியிடமிருந்து அதிமுகவை மீட்பதற்காக மாநிலம் முழுக்க சுற்றுப்பயணம் மேற்கொள்வார். அவர் தலைமையில் பணியாற்றுவதாக ஏற்கனவே ஓ.பி.எஸ். ஒப்புதல் அளித்திருக்கிறார். என்ன ஒரு நம்பக்கூடிய தகவல்?!

சிறை வாசத்தாலும், பிறகு கோவிட் பாதிப்பாலும் சோர்வடைந்திருந்தாலும் சசிகலாவின் இந்த உத்வேகமான உற்சாகத்தின் பின்னணியில் பா.ஜ.க. இருக்கிறதென்று பரவலாகப் பேசப்படுகிறது.காவி தூதுவர் ஒருவர் சசிகலாவின் சென்னை வீட் டுக்கு வந்ததாகக் கூறப்படுகிறது. பா.ஜ.க. அவரை ஆதரிப்பதன் அறிகுறியாக இதைப் பார்க்கலாம். தமிழகத்தில் தொண்டர்களின் எண்ணிக்கையை வளர்க்க முடியாத பா.ஜ.க., ஏற்கனவே தயார்நிலை யில் உள்ள உணவாக அ.இ.அ.தி.மு.கவை அப்படியே விழுங்குவதன் மூலம் தன் தொண்டர் பலத்தைக் கூட்ட முயற்சி செய்யலாம். சசிகலாவுக்கு எதிரான பொருளாதாரக் குற்ற வழக்குகள் நிலுவையில் இருப்பதால், அவர் மத்திய அரசின் அழுத்தங்களுக்கு வளைந்து கொடுக்கவேண்டிய நெருக்கடியில் இருக்கிறார். அரசியல் வாழ்விலி ருந்து ஓய்வு பெறுவதாக அவர் தேர்தலுக்கு முன்பு அளித்த அறிக்கைகூட பா.ஜ.க. மேலிடத்தின் வற்புறுத்தலால் வந்ததுதான். எடப்பாடி பழனிச் சாமி தேர்தலை வெல்ல வேண்டும் என்பதற்காக நகர்த்தப்பட்ட காய் அது. அது பலிக்கவில்லை.

இப்பொழுது தேர்தலில் வென்று, சரியான நிர்வாகத்திறமையை வெளிப்படுத்தி எல்லா தரப்பு மக்கள் மனங்களிலும் ஸ்டாலின் இடம் பிடித்துவரும் சூழலில், அதிமுகவின் கலங்கிய குட்டையில் மீன் பிடிக்கும் பாஜகவின் முயற்சிகள் காவியினருக்கு விபரீதமாகவே முடியலாம். ஒரு வேளை பாஜகவின் தூண்டுதலால் கட்சி இரண்டாகப் பிரிந்தால்கூட, வெகு சில சுயநலமிக்க தலைவர்களே இந்த இரு பிரிவுகளுடனோ பா.ஜ.க.வுடனோ சேர்வதில் ஆர்வம் காட்டுவார்கள். அனைவரையும் உள்ளடக்கிய அரசியலை முன்னிறுத்திவரும் நல்ல நிர்வாகியான ஸ்டாலினுடன் இணையவே எம்ஜிஆரின் பெரும்பாலான தொண்டர்கள் விரும்புவார்கள் என எதிர்பார்க்கலாம்.

## தனிமைப்படுத்தல் சட்டத்தை மீறிய மேலும் 563 பேர் கைது



கொழும்பு, ஜுலை 04

நாட்டில் தனிமைப்படுத்தல் சட்ட விதிமுறைகளை மீறிய மேலும் 563 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்தார்.

இதற்கமைவாக தனிமைப்படுத்தல் சட்டவிதிமுறைகளை மீறியக் குற்றச்சாட்டில் இது வரை கைதுசெய்யப்பட்டோரின் எண்ணிக்கை 46 ஆயிரத்து 823 ஆக உயர்வடைந்துள்ளது.

மாத்தளை பிரதேசத்திலேயே அதிகளவானோர் கைது செய்யப்பட்டுள்ளனர். குறித்த பிரதேசத்தில் 66 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

மேலும், மட்டக்களப்பு மாவட்டத்தில் 49 பேரும், இரத்தினபுரி மாவட்டத்தில் 47 பேரும் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

இதேவேளை, பயணக்கட்டுப்பாட்டு விதிமுறைகளை மீறும் வகையில், மேல் மாகாணத்திலிருந்து வெளியேறிச் செல்ல முற்பட்ட மேலும் 564 பேர் மீண்டும் அவர்களது பிரதேசங்களுக்கே திருப்பியனுப்பப்பட்டுள்ளனர் என்றும் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் மேலும் கூறினார். (இ)


**தொழிற்சாலை விற்பனைக்கு**

**வவுனியா, வடக்கு புளியங்குளம் பகுதியில் இருக்கும் ஓர் ஏக்கர் காணியில் அமைந்த 6,500 சதுர அடி கொண்ட 3 Phase மின்சார இணைப்புடன் கூடிய உடன் பாவனைக்கு உகந்த புதிய கட்டடம் விற்பனைக்கு உண்டு.**

விவரங்களுக்கு
**nnconsultancy9@gmail.com**
அல்லது **+ 65 96182105** என்ற வாட்ஸ்அப் இலக்கத்துடன் உடன் தொடர்பு கொள்ளவும்.


## மரண அறிவித்தல்

**மலர்வு** **17 - 12 - 1947**



**உதிர்வு** **02 - 07 - 2021**

### தம்பிதுரை கார்த்தி

யாழ். மல்லாகத்தைப் பிறப்பிடமாகவும், கனடா Montreal ஐ வசிப்பிடமாகவும் கொண்ட தம்பிதுரை கார்த்தி நேற்று முன்தினம் (02-07-2021) வெள்ளிக்கிழமை அன்று காலமானார்.

அன்னார், கார்த்தி - அன்னம் தம்பதிகளின் அன்பு மகனும், சந்திரரதியின் அன்புக் கணவரும், சியாமினி, ஜெமிலா, கண்ணன், கஜன் ஆகியோரின் அன்புத் தந்தை யும்,விமலேஸ்வரன், மதன், லக்ஷிகா ஆகியோரின் அன்பு மாமனா ரும்,சங்கீதா ( இலங்கை ), ஹறிஸ் (கனடா), ஹானுஜன் (கனடா) ஆகி யோரின் அன்புப் பேரனும் ஆவார்.

*கிரியை :*
Sunday, 04 Jul 2021 10:00 AM - 4:00 PM
Complexe Funéraire Aeterna et Crématorium 55 Rue Gince, Saint-Laurent, QC H4N 1J7, Canada.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தொடர்புகளுக்கு :
**விஜி - மகன்**
Mobile : +15146994585

தகவல்
**குடும்பத்தினர்.**

## தமிழகமும்...

கும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:- "தமிழ்த் தேசியக் கூட்டமைப்பாக நாம் அனைவரையும் அரவணைத்துப் போகின்ற நிலைமையைக் கையாளவுள்ளோம்.

மக்களின் காணிப் பிரச்னை, மாகாண சபைகள், இனம் சார்ந்த பூர்வீகத்தை உடைத்தெறிந்து, வரலாற்றைச் சிதைக்கின்ற செயற்பாடுகளை நிறுத்துவதற்கான பலத்தை உருவாக்குவதற்கு பலமான சக்தியாக தமிழ்த் தரப்பு இருக்க வேண்டும் என்ற விடயம் கூட்டத்தில் கலந்துரையாடப்பட்டுள்ளது.

புலம்பெயர்ந்த உறவுகளையும், தமிழ் நாட்டு தமிழர்களையும் இணைத்து செயற்படும் போது தமிழ்த் தரப்புக்கு பெரும் பலத்தை பெறுகின்ற வாய்ப்பு ஏற்படும்.

கூட்டமைப்பின் அடுத்த கட்ட நடவடிக்கைகள் தொடர்பில் நாளை (இன்று) நடைபெறவுள்ள கூட்டத்தில் கலந்துரையாடவுள்ளோம்" - என்றார். (இ - 03)

## யாழ். மாவட்டத்தில்...

மாகாண சுகாதார சேவைகள் திணைக்கள பணிப்பாளர் வைத்தியர் ஆர். கேதீஸ்வரன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அனுப்பி வைக்கப்பட்டுள்ள ஊடக அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

யாழ்.மாவட்டத்தில் முதல் கட்டமாக கடந்த மே மாத இறுதியிலும் யூன் மாத ஆரம்பத்திலும் 49,602 பேருக்கு முதல் தடவை கோவிட்-19 தொற்று நோய்க்கெதிரான தடுப்பூசி வழங்கப்பட்டது. இவர்களுக்கான இரண்டாவது தடவை தடுப்பு மருந்தேற்றும் பணிகள் கடந்த ஜூன் 28 ஆம் திகதி முதல் ஜூலை 3 ஆம் திகதி வரை இடம்பெற்றது. இதில் 46,648 பேர் இரண்டாவது தடவைக்கான தடுப்பு மருந்தினை பெற்றுக்கொண்டனர்.

முதல் தடவை பெற்றுக் கொண்டவர்களில் சிலர் தற்போது தனிமைப்படுத்தப்பட்டுள்ள பிரதேசங்களில் இருப்பதனால் அப்பிரதேசங்கள் தனிமைப்படுத்தலில் இருந்து விடுவிக்கப்பட்ட பின்னர் இவர்களுக்கான இரண்டாவது தடவைக்கான தடுப்பு மருந்து வழங்கப்படும்.

யாழ்.மாவட்டத்தில் இரண்டாவது கட்டமாக தடுப்பூசி வழங்குவதற்கு 50,000 சினோபார்ம் தடுப்பு மருந்துகள் நேற்று கிடைக்கப்பெற்றுள்ளன. இரண்டாவது கட்ட தடுப்பூசி ஏற்றும் பணிகள் ஜூலை மாதம் 5ஆம் திகதி முதல் 10ஆம் திகதி வரை இடம்பெறும்.

இவ் இரண்டாவது கட்ட தடுப்பூசி வழங்குதலானது சுகாதார அமைச்சின் வழிகாட்டல்களுக்கு அமைவாக முதியோர் இல்லங்களில் உள்ளவர்களுக்கும், 60 வயதிற்கு மேற்பட்டவர்களுக்கும், 18 வயதிற்கு மேற்பட்ட ஆபத்து நிலை உடைய கர்ப்பிணித் தாய்மார்கள், 35 வயதிற்கு மேற்பட்ட அனைத்து கர்ப்பிணித் தாய்மார்களுக்கும், அத்துடன் முன்களப்பணியாளர்களாக உள்ள கர்ப்பிணித் தாய்மார்களுக்கும் வழங்கப்படும். மேலும் தொழிற்சாலை பணியாளர்களுக்கும், ஏனைய முன்களப்பணியாளர்களுக்கும் முன்னுரிமை அடிப்படையில் வழங்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

60 வயதிற்கு மேற்பட்டவர்களுக்கு தடுப்பூசி ஏற்றும் நிலையங்கள், திகதிகள் பற்றிய விவரங்கள் அந்தந்த பிரதேசங்களுக்குரிய சுகாதார வைத்திய அதிகாரிகளினால் அறியத்தரப்படும்.

தடுப்பூசி அல்லது வேறு மருந்துகளுக்கு ஒவ்வாமை உடையவர்களுக்கு தடுப்பூசி வழங்குவதற்கு யாழ். போதனா வைத்தியசாலையிலும், தெல்லிப்பளை, பருத்தித்துறை, சாவகச்சேரி, ஊர்காவற்துறை ஆதார வைத்தியசாலைகளிலும், எதிர்வரும் ஜூலை 10ஆம் திகதி சனிக்கிழமை காலை 8.00 மணி முதல் வழங்குவதற்கு ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளது.

அவ்வாறான நிலைமைகள் இருப்பதாக சந்தேகிக்கப்பட்டு தடுப்பூசி வழங்கப்படாது திருப்பி அனுப்பப்பட்டவர்கள் தமது பிரதேசத்துக்குரிய சுகாதார வைத்திய அதிகாரியின் பரிந்துரைக் கடிதத்தைப் பெற்றுக்கொண்டு மேற்குறிப்பிட்ட வைத்தியசாலைகள் ஏதாவது ஒன்றில் தமக்குரிய தடுப்பூசியினை பாதுகாப்பாக பெற்றுக்கொள்ள முடியும்.

அவ்வாறே மேற்குறிப்பிடப்பட்ட வகையில் அடங்கும் கர்ப்பிணித் தாய்மார்களுக்கு அவர்களுடைய சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையில் எதிர்வரும் ஜூலை 10ஆம் திகதி சனிக்கிழமை காலை 8.00 மணி முதல் வழங்குவதற்கு ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளது.

தொழிற்சாலைப்பணியாளர்கள், முன்களப்பணியாளர்களுக்கு தடுப்பூசி ஏற்றும் ஒழுங்குகள் அப்பிரதேசத்திற்குரிய சுகாதார வைத்திய அதிகாரியினால் ஏற்பாடு செய்யப்பட்டு அறிவிக்கப்படும் -என்றுள்ளது.

## வடக்கு...

மேற்கொள்ளப்பட்டுவருவதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

அதன் அடிப்படையில்,

முன்னாள் பிரதம செயலாளர்கள் க.தெய்வேந்திரம், விஜயலட்சுமி ரமேஸ், வடக்கு மாகாணக் கல்வி அமைச்சின் செயலாளர் இளங்கோவன், கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் ரூபவதி கேதீஸ்வரன் ஆகியோருடன் கொழும்பில் பணியாற்றும் பெண்மணி ஒருவர் உட்பட்ட ஐவர் பரிந்துரைக்கப்பட்டுள்ளனர் என நம்பகரமாக தெரியவந்துள்ளது.

குறித்த உயர் அதிகாரிகளில் சிலரை வடக்கில் பிரபலமான ஆளுங்கூட்டணிப் பிரமுகர்கள் இருவர் பரிந்துரைத்துள்ளமையால் தேர்வில் கொழும்பின் உயர் பீடம் நெருக்கடிகளைச் சந்தித்திருப்பதாகவும் தெரியவருகிறது.

அ.பத்திநாதன் இன்றுடன் ஓய்வு பெறவேண்டிய நிலையிலும் நேற்றும், இன்றும் விடுமுறை நாட்கள் என்பதால் அவர் கடந்த வெள்ளிக்கிழமை தொடக்கம் ஓய்வு பெற்றுவிட்டார் என தெரியவருகிறது.

இதனால் திங்கட்கிழமை புதிய செயலாளர் பதவி ஏற்க்கக்கூடும் என்றபோதிலும் அரசியல் பிரமுகர்களின் சிபாரிசு காரணமாக புதிய செயலாளர் தெரிவில் தாமதம் ஏற்படக்கூடும் என்று கொழும்புத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

## 1,251 பேருக்கு...

நீண்ட நாட்களின் பின்னர் நாளொன்றில் குறைந்தளவான கொரோனாத் தொற்றாளர்கள் எண்ணிக்கை நேற்று பதிவாகியுள்ளது.

இதற்கமைய நாட்டில் கொரோனாத் தொற்றால் பாதிக்கப்பட்டவர்களின் மொத்த எண்ணிக்கை 2 இலட்சத்து 64 ஆயிரத்து 46 ஆக அதிகரித்துள்ளது.

அத்துடன், கொரோனாத் தொற்றால் பாதிக்கப்பட்ட மேலும் 1,853 பேர் நேற்று குணமடைந்து வீடு திரும்பினர்.

அதன்படி, நாட்டில் கொரோனாத் தொற்றிலிருந்து குணமடைந்தவர்களின் மொத்த எண்ணிக்கை 2 இலட்சத்து 31 ஆயிரத்து 394 ஆக உயர்வடைந்துள்ளது.

இதேவேளை, கொரோனாத் தொற்று காரணமாக வைத்தியசாலைகள் மற்றும் தனிமைப்படுத்தல் மையங்கள் என்பவற்றில் சிகிச்சை பெறுபவர்களின் எண்ணிக்கை 29 ஆயிரத்து 461 ஆக அதிகரித்துள்ளது. (இ)

## கூட்டமைப்பின்...

இதில் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராஜா, புளொட் தலைவர் தர்மலிங்கம் சித்தார்த்தன் மற்றும் ரெலோவின் தலைவர் செல்வம் அடைக்கலநாதன் ஆகியோர் கலந்துகொண்டனர்.

மூன்று தலைவர்களும் இன்றும் மீண்டும் கூடிப் பேசவுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

தமிழ் மக்களின் பிரச்னைகளுக்குத் தீர்வு காணும் செயற்பாடுகளில் தமிழ்த் தேசியக் கட்சிகள் அனைத்தையும் ஓரணியில் இணைத்து செயற்படுவது தொடர்பில் நேற்றைய சந்திப்பில் பேசப்பட்டது எனப் பங்காளிக் கட்சிகளின் மூன்று தலைவர்களும் தெரிவித்தனர். (இ)

## பருத்தித்துறை நகரில் எழுமாற்றாக

# 100 பேரிடம் பெறப்பட்ட மாதிரிகளில் 6 பேருக்கு கோவிட்-19 தொற்று உறுதி

யாழ்ப்பாணம், ஜூலை 04

பருத்தித்துறை சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவில் எழுமாற்றாக 100 பேரிடம் பெறப்பட்ட மாதிரிகளில் ஆறு பேருக்கு கோவிட்-19 நோய்த்தொற்றுள்ளமை கண்டறியப்பட்டுள்ளது.

அத்துடன், மந்திகை பகுதியில் 6 பேருக்கு தொற்றுள்ளமை கண்டறியப்பட்டுள்ளது என்று சுகாதாரத் துறையினர் தெரிவித்துள்ளனர்.

பருத்தித்துறை நகரில் எழுமாறாக 100 பேரிடம் நேற்று முன் தினம் பெறப்பட்ட மாதிரிகள் பி.சி.ஆர் பரிசோதனைக்கு அனுப்பிவைக்கப்பட்டன. அவர்களில் 6 பேருக்கு தொற்றுள்ளமை கண்டறியப்பட்டுள்ளது.

6 பேரில் ஐவர் பருத்தித்துறை கடற்கரை வீதியில் வசிப்பவர்கள். ஒருவர் பருத்தித்துறை நகர் பகுதியில் வசிப்பவர்.

அத்துடன் மந்திகையில் பெறப்பட்ட மாதிரிகளில் வர்த்தகர்கள் மூவர், வெளிநாட்டில் இருந்து வருகை தந்த இருவர் மற்றும் பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவர் என ஆறு பேருக்கு தொற்று உள்ளமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

# பஸில் பாராளுமன்றம் செல்வது தாமதமாகும்

கொழும்பு, ஜூலை 04

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் தேசிய அமைப்பாளர் பஸில் ராஜபக்ஷவின் பாராளுமன்ற வருகை பிற்போகக்கூடும் என அரசியல் வட்டாரங்கள் தெரிவித்தன.

பஸில் ராஜபக்ஷ பாராளுமன்றம் வருவதாக இருந்தால் ஆளுங்கட்சி எம்.பியொருவர் பதவி துறக்கவேண்டும். அதன் பின்னர் பஸிலின் பெயர் பரிந்துரைக்கப்பட வேண்டும். அதனை உறுதிப்படுத்தி தேர்தல் ஆணைக்குழு வர்த்தமானி வெளியிட வேண்டும்.

இவ்வாறான நடைமுறைகளால் ஜூலை நடுப்பகுதியிலேயே பஸில் பாராளுமன்றம் வரக்கூடும் என ஆளுங்கட்சி பிரமுகர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

அதேவேளை, ராஜபக்ஷ குடும்ப உறுப்பினர்களுக்கிடையிலான கலந்துரையாடலொன்று நேற்று நடைபெற்றுள்ளது.

ஜனாதிபதியின் இல்லத்தில் நடைபெற்ற இந்த சந்திப்பில் மஹிந்த ராஜபக்ஷ, சமல் ராஜபக்ஷ, பஸில் ராஜபக்ஷ, நாமல் ராஜபக்ஷ, சஷீந்திர ராஜபக்ஷ உள்ளிட்டவர்கள் பங்கேற்றுள்ளனர்.

பஸில் ராஜபக்ஷவின் பாராளுமன்ற வருகை சம்பந்தமாகவே இதன்போது கலந்துரையாடப்பட்டுள்ளது. எனினும், உறுதியான முடிவு எதுவும் எடுக்கப்படவில்லை.

# வருகிறது மற்றொரு இறக்குமதித் தடை?

இலங்கை ரூபாவுக்கு நிகரான டொலர் பெறுமதியை நிலையாகப் பேணுவதற்கான மற்றுமொரு நடவடிக்கையாக, ஆடம்பர பொருட்கள் இறக்குமதியை தடை செய்வதற்கு அல்லது இறக்குமதிக்கு கடுமையான கட்டுப்பாடு விதிப்பதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளதாக மத்திய வங்கி தகவல்கள் தெரிவிக்கின்றன என்று தென்னிலங்கை ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

வீட்டுப்பாவனை மின் உபகரணங்கள், கைபேசிகள், வாசனை திரவியங்கள் உள்ளிட்ட அத்தியாவசிய பொருள் அல்லாத வகைகளுக்கும் அடங்கும் பொருட்களுக்காக இறக்குமதித் தடை விதிக்கப்படவுள்ளது.

இந்த கட்டுப்பாடு விதிக்கப்படும் திகதி மற்றும் அந்த கால எல்லை எவ்வளவு காலம் செல்லுபடியாகும் என்பது தொடர்பான இறுதித் தீர்மானம் இது வரை எடுக்கப்படவில்லை.

தற்போது, கட்டுப்பாடு விதிக்கக்கூடிய பொருட்கள் தொடர்பான பட்டியலை தயாரிக்கும் பொறுப்பு மத்திய வங்கியிடம் ஒப்படைக்கப்பட்டுள்ள அதேவேளை, இது தொடர்பில் நாளை திங்கட்கிழமை இடம்பெறவுள்ள அமைச்சரவை கூட்டத்தில் மேலதிக கலந்துரையாடல்கள் முன்னெடுக்கப்படவுள்ளன.

## யாழில் 36 பேர்...

தெல்லிப்பளை ஆதார வைத்தியசாலையில் 02 பேர்,

யாழ்.போதனா வைத்தியசாலையில் 05 பேர் (ஒருவர் மரணம்)

யாழ்.மாநகர சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் 05 பேர் (ஒருவர் மரணம்)

சங்கானை சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் 04 பேர்,

நல்லூர் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் 05 பேர்,

தெல்லிப்பளை சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் 02 பேர்,

மன்னார் மாவட்டத்தில் 10 பேர்

மன்னார் நகர் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் 04 பேர்,

மன்னார் மாவட்ட வைத்தியசாலையில் 06 பேர்,

கிளிநொச்சி மாவட்டத்தில் ஒருவர்

தர்மபுரம் பிரதேச வைத்தியசாலையில் ஒருவர்,

வவுனியா சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் ஒருவர்,

தொற்றாளர்களாக அடையாளம் காணப்பட்ட நிலையில் முல்லைத்தீவு தனிமைப்படுத்தல் நிலையத்தில் 05 பேருக்கு தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

## குடாநாட்டில்...

டைய ஏ.ஜஸ்மின் யூலியட் என்ற பெண் ஆகியோரே உயிரிழந்துள்ளனர்.

யாழ்.போதனா வைத்தியசாலையில் நேற்று மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர் பரிசோதனையில் 53 பேருக்கு தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## கொரோனா...

றால் மரணமடைந்தவர்களின் மொத்த எண்ணிக்கை 3 ஆயிரத்து 191 ஆக உயர்வடைந்துள்ளது.

நேற்றுமுன்தினம் உயிரிழந்த 34 பேரில் 21 ஆண்களும், 13 பெண்களும் அடங்குகின்றனர்.

இதன்படி 30 முதல் 59 வயதுக்கு இடைப்பட்ட 3 பெண்களும், 3 ஆண்களும் மரணித்துள்ளனர். அதேவேளை, 60 வயதுக்கு மேற்பட்ட 10 பெண்களும், 18 ஆண்களும் உயிரிழந்துள்ளனர். (இ)

## நாட்டில் மேலும்...

ஸ்ரீ ஜெயவர்த்தனபுர பல்கலைக்கழகத்துக்கு கடந்த வாரம் அனுப்பப்பட்ட 141 மாதிரிகளில் 14 பேருக்கு அதிக வீரியம் கொண்ட டெல்டா வைரஸ் தொற்று இருப்பது உறுதிசெய்யப்பட்டுள்ளது.

கொழும்பு, காலி, திருகோணமலை மற்றும் மாத்தறை ஆகிய மாவட்டங்களிலே இவ்வாறு டெல்டா வைரஸ் தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர். முன்னதாக தெமட்டகொடை பகுதி யிலும் டெல்டா தொற்றாளர்கள் ஐவர் அடையாளம் காணப்பட்டனர். நாட்டில் இதுவரை 18 பேருக்கு டெல்டா வைரஸ் தொற்றியுள்ளது.

ஈழநாடு
Eelanadu

ஊடகவியலாளர் தரிந்துக்கு அச்சுறுத்தல்:

## சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் மீது ஊடக அமைப்புகள் கூட்டாக முறைப்பாடு



கொழும்பு, ஜுலை 04

ஊடகவியலாளர் தரிந்து ஜயவர்தனவுக்கு அச்சுறுத் தல் விடுத்த சம் பவம் தொடர்பில் சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் தேஷபந்து தென்னகோனுக்கு எதிராக முறைப்பாடு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இலங்கையில் உள்ள ஆறு ஊடக அமைப்புகள் ஒன்றிணைந்து பொலிஸ்மா அதிபர் சந்தன விக்கிர மரத்னவுக்கு கடிதம் அனுப்பி, முறையிட்டுள்ளன.

ஊடகவியலாளர் தரிந்து பேஸ்புக்கில் பகிர்ந்த செய்தி தொடர்பில் சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் தேஷபந்து தென்னக்கோன், அவரது பேஸ்புக் ஊடாக அச்சுறுத்தியுள்ளார்.

ஊடகவியலாளர் தரிந்து ஜயவர்தனவுக்கு பேஸ்புக் மூலம் விடுத்துள்ள மறைமுக அச்சுறுத்தல் தொடர்பில் ஊடக அமைப்புக்களின் கவலை வெளியிட்டுள்ளன.

”ஊடகவியலாளர் தரிந்து பொய்யான செய்தியை வெளியிட்டுள்ளார். அதற்கு இயற்கை தண்டனை யளிக்கும். பிரபாகரன் மற்றும் ஏனைய குற்றவாளி களுக்கு என்ன நடந்தது என்பதைத் தரிந்து அவதானிக்க வேண்டும்” என்று தேஷபந்து தென்னக்கோன் பேஸ்புக் கில் குறிப்பிட்டுள்ளார்.

கடந்த 2021 ஜுன் 29 ஆம் திகதி அரச தகவல் திணைக்களத்தில் இடம்பெற்ற, அமைச்சரவை முடிவு களை அறிவிக்கும் ஊடகவியலாளர் சந்திப்பில், ஊடக வியலாளர் தரிந்து ஜயவர்தன எழுப்பிய கேள்வியொன் றுக்கு ஊடகத்துறை அமைச்சரும் அமைச்சரவைப் பேச்சாளருமான அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல அளித்த பதிலே குறித்த செய்தியின் மூலமாகும்.

இந்தச் சம்பவம் தொடர்பில் முறையான விசாரணை ஒன்றை முன்னெடுத்து, ஊடகவியலாளரின் பாதுகாப்பை உறுதி செய்யுமாறும் ஊடக அமைப்புகள் கோரியுள்ளன.

ஊடக சேவையாளர் தொழிற்சங்க சம்மேளனம், சுதந் திர ஊடக அமைப்பு, இலங்கை தொழிற்சார் ஊடகவி யலாளர்களின் சங்கம், ஸ்ரீலங்கா முஸ்லிம் மீடியா போரம், தமிழ் ஊடகவியலாளர்கள் ஒன்றியம் மற்றும் இலங்கை இளம் ஊடகவியலாளர்களின் சங்கம் ஆகியன பொலிஸ்மா அதிபரிடம் முறையிட்டுள்ளன. (இ)

# இலங்கை கடல் வளத்தைப் பாதுகாக்க இந்திய அரசு செய்த உதவிக்கு நன்றி!

மனோ கணேசன் எம்.பி. தெரிவிப்பு



**கொழும்பு, ஜுலை 04**

**“ஒரு நட்பு நாட்டு அரசு என்ற முறையில், எங்கள் மீனவர் வாழ்வை மீண்டும் கட்டியெழுப்ப, இந்தியக் கடற் படை கப்பல் “சர்வேக்ஸக்“ மூலம் இந்திய அரசு செய் துள்ள உதவிக்கு, இலங்கை மீனவர் சமூகம் சார்பாக நாம் நன்றி கூறுகின்றோம்.”**

**- இவ்வாறு தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலை வர் மனோ கணேசன் எம்.பி. தெரிவித்தார்.**

“எக்ஸ் - பிரஸ் பேர்ல்“ கப்பலின் இரசாயனக் கழிவுகளை ஆய்வு செய்து இலங்கை கடல் வளத்தைப் பாது காக்க இந்திய அரசு தனது கடற் படை மூலம் செய்து வரும் உதவி கள் தொடர்பில் மனோ எம்.பி. மேலும் கூறியதாவது:-

“எக்ஸ் - பிரஸ் பேர்ல்” கப்பல் மூலமான இரசாயனக் கழிவினால் இலங்கை கடல் வளத்துக்கு ஏற்பட்ட அழிவை ஆய்வு செய்து பாதுகாக்க, இந்திய கடற்படை கப்பல் “சர்வேக் ஸக்” மூலம் இந்திய அரசு எடுத் தாண்ட முயற்சி பாராட்டத்தக்கது.

வரலாற்றில் ஒருபோதும் இடம்பெறாத பேரழிவு, இலங்கை கடல் வளத்துக்கு, “எக்ஸ் - பிரஸ் பேர்ல்“ கப்பலின் இரசாயனக் கழிவுகள் மூலம் ஏற்பட்டது.

இதனால் மேற்கு கரை முழுக்க மீனவ சமூகம் தொழில் இழந்து, வாழ்விழந்து, ஏறக்குறைய நடுத்தெருவுக்கு வந்துள்ளது. அவர்களது ஆவேசக் குரல் இலங்கை அரசுக்கு கேட்கவில்லை. ஆனால், இந்திய அரசுக்கு கேட்டுள்ளது.

நடுக்கடலில், இரசாய னப் பொருகளைச் சுமந்த படி எரிந்து கொண்டி ருந்த “எக்ஸ் - பிரஸ் பேர்ல்“ கப்பலை, இலங்கை துறை முகத்துக்கு, இலங்கை கடல் எல்லைக்குள் வரச் சொன்னவர் யார் என எவருக்கும் தெரியாது.

அந்த அமைச்சர் அல்லது அதி காரி யார் என மக்கள் கேட்கின் றார்கள். அவரைக் கண்டால் வரச் சொல்லுங்கள். அவருக்கு சுவை யான மீன் உணவு தர தாங்கள் தயார் என மீனவ மக்கள் ஆர்ப்பாட்டம் செய்கின்றார்கள்.

இலங்கை கடல் வளம் அழிகின் றது. மீனவர் வாழ்வு அழிகின்றது. இலங்கை மக்களுக்கு உணவில் மீன் இன்று சந்தேக பொருள் ஆகிவிட் டது.

இவற்றுக்கான நட்டஈட்டை “எக்ஸ் - பிரஸ் பேர்ல்” எப்போது தரும்? எத்தனை கோடிகள் கிடைக் கும்? அதில் எத்தனை இலட்சங்கள் மீனவர்களுக்குக் கிடைக்கும்? இந்த கேள்விகளுக்கு விடைகள் இன்ன மும் இல்லை.

இலங்கை அரசு இவற்றுக்குப் பதில் கூறாமல் ஒளிகின்றது. இது வரை துறைமுக துறை அமைச்சர் ரோஹித அபேகுணவர்தனவோ, மீன்வள துறை அமைச்சர் டக்லஸ் தேவாந்தாவோ இது பற்றிய உண் மைமைகளைப் பேச மறுக்கின்ற னர். பேரழிவுக்குப் பொறுப்பேற்க மறுக்கின்றனர்.

இந்தப் பின்னணியில் இந்திய அரசின் இந்த உதவி ஒரு ஆறுதல். “சாகர் ஆரக்ஸா” என்ற கடல் செயற் பாட்டின் மூலம் இந்தியக் கடற் படை கப்பல் “சர்வேக்ஸக்” எடுத் துக்கொண்ட முயற்சிகளுக்கு, இலங்கைக்கான இந்தியத் தூதுவர் கோபால் பாக்லே மற்றும் குறிப் பிட்ட கப்பலின் தலைவர், மாலு மிகளுக்கு , இலங்கை மீனவர் சமூ கம் சார்பாக எனது நன்றியைத் தெரி விக்கின்றேன்” - என்றார். (இ)

## சஜித் - ஆஸி. தூதுவர் முக்கிய சந்திப்பு



கொழும்பு, ஜுலை 04

இலங்கைக்கான ஆஸ்திரேலியத் தூதுவர் டேவிட் ஹோலிவுக்கும் எதிர்க் கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவுக்கும் இடையே முக்கிய சந்திப்பு இடம்பெற்றுள்ளது.

இந்தச் சந்திப்பு எதிர்க்கட்சித் தலை வர் அலுவலகத்தில் நடைபெற்றுள்ளது.

கடுமையான பேரழிவாக மாறியுள்ள கொரோனா அச்சுறுத்தல் உட்பட இருதரப்பு முக்கியத்துவம் வாய்ந்த பல பிரச்சினைகள் தொடர்பாகவும் கலந் துரையாடப்பட்டன என்று எதிர்க்கட் சித் தலைமையகம் தெரிவித் துள்ளது.

இந்தச் சந்திப்பில் இலங்கையின் அபிவிருத்தி மற்றும் முன்னேற்றத்துக் குத் தேவையான ஆதரவை வழங்குமாறு எதிர்க்கட்சித் தலைவர், ஆஸ்திரேலியத் தூதுவரிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

இலங்கையின் அபிவிருத்திக்கும் ஐக்கிய மக்கள் சக்தியால் செயற்படுத் தப்பட்டு வரும் “எதிர்க்கட்சியிலிருந்து ஒரு மூச்சு“ திட்டத்துக்கும் ஆதரவு வழங்கு வதாகவும் ஆஸ்திரேலியத் தூதுவர் இதன்போது உறுதியளித்துள்ளார். (இ)







இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 04.07.2021 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

# இன்றைய தொலைக்காட்சி நிகழ்ச்சி நிரல்

**காலை**
6.00 மணி : பக்திப்பாடல்கள்
6.30 மணி : வணக்கம் டான்
6.35 மணி : மதம் சார்பான நற்சிந்தனைகள்
6.55 மணி : இன்றைய பலன்
7.30 மணி : இன்றைய பத்திரிகைகளில்
8.30 மணி : காலை செய்திகள்
9.00 மணி : கலாட்டா காலை (நேரலை)
10.30 மணி : அறிந்தும் அறியாமலும்
11.00 மணி : BEAT BOX
11.30 மணி : தடை அதை உடை - தற்காப்புக்கலை



**பகல்**
12.00 மணி : வீக் என்ட் கொண்டாட்டம் (நேரலை)
1.00 மணி : மழலைகள் நேரம்-சிறுவர் நிகழ்ச்சி



1.30 மணி : வீக் என்ட் மூவி-வில்லன்
4.30 மணி : காட்டுன் தமிழ்
5.00 மணி : COFFE WITH பிரமுகர்
6.00 மணி : கலக்கல் ஸ்ரார்-
திறமையாளர்களுக்கான களம்

**இரவு**
7.00 மணி : SPOTLIGHT
8.00 மணி : இரவுச் செய்திகள்
09.00 மணி : செல்லாடுகளம்-மகாகவி எனும் யுக
புருசர்-50 ஆவது ஆண்டு நினைவுப்பதிவு



10.00 மணி: -நேர்கொண்ட பார்வை- நடாளுமன்ற
உறுப்பினர் வேலுகுமார்



**காலை**
6.00 மணி : சிரி சிரி சிரி
8.00 மணி : சிரிப்பு சரடிவெடி
10.00 மணி : ஒரு பட கொமடி
11.00 மணி : சிரிப்போ சிரிப்பு

**பகல்**
1.00 மணி : நகைச்சுவை மன்னன்
கவுண்டமணி செந்தில் நடிப்பில் கலக்கல் காட்சிகள்
3.00 மணி : குண்டக்க மண்டக்க
5.00 மணி : ஒரு பட கொமடி
6.00 மணி : கொமடி கலாட்டா

**இரவு**
8.00 மணி : ஒரு படக்கொமடி
9.00 மணி : சிரிப்போ சிரிப்பு
10.00 மணி : விடிய விடிய சிரிப்பு தான்

**காலை**
6.00 மணி : பனிப்பூக்கள்
7.00 மணி : திசை எட்டும் இசை எட்டும்
8.00 மணி : வணக்கம் டான் மியூசிக்
9.00 மணி : மெல்லிசை
10.00 மணி : கேட்டாலே பரவசம் (நேரலை)

**பகல்**
12.00 மணி : ராஜா ராணி
1.00 மணி : விசை இசை
3.00 மணி : வட்ஸ் அப் (நேரலை)
4.00 மணி : டீ டைம் ராகங்கள் (நேரலை)
5.00 மணி : இனிது இனிது
6.00 மணி : என்றென்றும் இசை
7.00 மணி : ஓய்வெடு நிலவே

**இரவு**
8.00 மணி : காற்றில் வரும் கீதம்
9.00 மணி : நிலவு தூங்கும் நேரம்

**காலை**
5.15 மணி : தரம் 06 - விஞ்ஞானம்
6.00 மணி : தரம் 07 - தமிழ்
6.45 மணி : தரம் 08 - தமிழ்
7.30 மணி : தரம் 09 - கணிதம்
8.15 மணி : தரம் 10 - கணிதம்
9.00 மணி : க.பொ.த உயர்தரம் (கலைப்பிரிவு)
நாடகமும் அரங்கியலும்
10.00 மணி : க.பொ.த உயர்தரம் (வணிகப்பிரிவு)
வணிகக்கல்வி
11.00 மணி : க.பொ.த உயர்தரம்
(கணிதம்,விஞ்ஞானப்பிரிவு) உயிரியல்

**பகல்**
12.00 மணி : தரம் 06 - விஞ்ஞானம்
1.00 மணி : தரம் 07 - தமிழ்
2.00 மணி : தரம் 08 - தமிழ்
3.00 மணி : க.பொ.த சாதாரண தரம் சங்கீதம்
3.40 மணி : க.பொ.த சாதாரண தரம் விஞ்ஞானம்
4.20 மணி : க.பொ.த சாதாரண தரம் விஞ்ஞானம்
5.00 மணி : க.பொ.த சாதாரண தரம் சித்திரம்
5.40 மணி : க.பொ.த சாதாரண தரம் புவியியல்
6.20 மணி : க.பொ.த சாதாரண தரம்
மாதிரி வினாத்தாள்

**இரவு**
7.00 மணி : க.பொ.த சாதாரண தரம்
மாதிரி வினாத்தாள்

**காலை**
5.00 மணி : சிவாய மந்திரம்
6.00 மணி : சுப்ரபாதம்
6.30 மணி : சுப்ரபாதம்
07.00 மணி : இன்றைய சிந்தனை
07.05 மணி : இன்றைய நாள்
07.30 மணி : மங்கள இசை
08.00 மணி : அருளுரை
08.30 மணி : திருவாசகம்
09.00 மணி : திருவிழா-01
10.00 மணி : பாடல்கள்
10.30 மணி : பஜனை
11.00 மணி : பக்திமலர்

**பகல்**
12.00 மணி : திரையில் பக்தி
12.30 மணி : திருவிழா-02
6.00 மணி : கந்தசஷ்டி கவசம்

**இரவு**
7.00 மணி : செய்திகள்
7.30 மணி : அருளுரை

**காலை**
7.00 மணி : நாளொரு நற்சிந்தனை
8.00 மணி : ஜெபமாலை
9.00 மணி : திருப்பலிப்பாடல்கள்
09.30 மணி : மன்றாடு
10.00 மணி: நாளொரு நற்சிந்தனை
(மறு ஒலிபரப்பு)
10.30மணி : திருப்பலி (யாழ்ப்பாணம்)
11.30 மணி : ஜெபமாலை

**பகல்**
12.00 மணி : திருப்பலி (திருகோணமலை)
01.00 மணி : திருப்பலி (மட்டக்களப்பு)
02.00 மணி : நற்சிந்தனை
03.00 மணி : திருப்பலி (யாழ்ப்பாணம்)
04.00 மணி: திருப்பலி (மட்டக்களப்பு)
05.00 மணி : திருப்பலி (திருகோணமலை)
06.00 மணி : நாளொரு நற்சிந்தனை
(மறு ஒலிபரப்பு)

**காலை**
6.00 மணி : கிராத்
7.00 மணி : இறை சிந்தனை
7.30 மணி : இஸ்லாமிய பாடல்
8.00 மணி : கலந்துரையாடல்
9.00 மணி : இஸ்லாமிய சீரிஸ்
10.00 மணி : மனதோடு பேசலாம்
10.30 மணி : கண் வசண்ணம் கை வண்ணம்
11.00 மணி : சுவனப்பாதை
11.30 மணி : வரலாறு சொல்லும் வைத்தியம்

**பகல்**
12.00 மணி : லுகர் அதான்
12.30 மணி : இஜ்லாமிய வரலாறு
1.00 மணி : இஸ்லாமிய திரைப்படம்
2.00 மணி : கஸீதா
2.30 மணி : இறை சிந்தனை
3.00 மணி : பாடல்கள்
3.30 மணி : பள்ளிவாசல் ஆவணப்படம்
4.00 மணி : சிறுவர் இஸ்லமிய கார்டூன்
5.00 மணி : இறை தென்றல்
6.00 மணி : தாஜீமதுல் குர்ஆன்

**இரவு**
7.00 மணி : பிறை பிரசங்கம்
8.00 மணி : இஸ்லாமிய வரலாறு